தென்மொழி

26-2-24

தமிழ் நாட்டைப் பெருமல்
தமிழர் வாழ் வில்லையே!

இந்தியத் தேசியம் என்பது பொய்மை !
  இந்திய ஒருமையென் றெண்ணுதல் அடிமை !
இந்தி(ய) மொழியென் றியம்புதல் கீழ்மை !
  'இந்தியா' தமிழருக் குதவாத கொள்கை !

பார்ப்பனர் — வடவர் — வணிகரே, இந்தியர் !
  பார்ப்பனர் ஆட்சி பயன்படா தெமக்கே !
ஊர்ப்பணக் கொள்ளையர் ஒருமைப்பா டென்பர் !
  ஒருநாள் அவையெலாம் அடங்குவ துறுதியே !

தமிழரெ லாம்தமைத் தமிழரென் றெண்ணுக !
  தம்சாதி மறக்க ; தமிழினம் நினைக்க !
தமிழரெ லாம்தமின் தாய்மொழி பேணுக !
  தமிழ்மொழி பேசுக ; பிறமொழி தவிர்க்கவே !

தமிழரெ லாம்தமின் தாய்நாட்டைக் கருதுக !
  தமிழ்நாட்டை விரும்புக ; தனிநாடாய் ஆக்குக !
தமிழர்க்குத் தமிழ்நாடு தம்நாடாய் ஆகுக !
  தமிழ்நாட்டைப் பெருமல் தமிழர்வாழ் வில்லையே !

வடி : 24
லை : 1 - 2

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
உருபா: 1-75

Scanned with CamScanner

நமக்கு வந்த மடல்கள்.

○ : 1264: பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம். தென்மொழி சுவடி : 23, ஓலை : 12 தங்கள் ஆசிரியவுரை கண்டேன். இந்த உரையைப் படித்துக் கொண்டிருந்த போது, நிமிர்ந்து நிற்கும் அரிமாவாகத் தாங்கள் என்முன் காட்சியளித்தீர்கள். என் அகக் கண்ணில் தங்கள் உருவம் கண்டு வணங்கினேன்.

கடந்த பத்தாண்டுகளும் தமிழக அரசியல் வாழ்வின் இருண்ட காலம் என்ற உண்மையைத் தாங்கள் ஒருவரே வெளிப்படுத்தியுள்ளீர்கள். இத்தகு வெளிப்பாட்டுக்குத் தாங்கள் மட்டுமே முழுத் தகுதியுடையவர் என்பதும் என் போன்றவர்க்கே புரிந்திட்ட உண்மையாகும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இவ்வுரையினைப் படித்துப் பார்க்கும் வகய்ப்பினைத் தாங்கள் அளித்திட வேண்டும் என்று பணிவன்புடன் வேண்டுகிறேன். தங்களன்புள்ள,

—நம்பி வளவன், மதுரை 20.

○ : 1265 : பெருமதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு, அன்புடன் எழுதுவது. இந்தத் தென்மொழி (சு.23 ; ஓ.12)-இல் முதலமைச்சர் மறைவு குறித்துத் தாங்கள் வெளியிட்டுள்ள ஆசிரிய உரை மிகவும் அருமையாக இருந்தது. தங்கள் நேருரையும் நெஞ்சை நெகிழ வைத்தது. மொத்தத்தில் இந்தத் தென்மொழி பலமுறை படிக்கும் எண்ணத்தைத் தூண்டியது. ஐயா உரு 100/க்குரிய காசோலை இத்துடன் அனுப்பியுள்ளோம். பெற்றுக் கொள்ளவும். அன்புடன் பேரா. அறவாணன்,

தாயம்மாள் அறவாணன், சென்னை. 29.

○ : 1266 : பெருமதிப்பிற்குரிய பாவலரேறு அய்யா அவர்களுக்கு ஆர். பி. சந்திரன் வணக்கம் செய்து எழுதிக் கொள்வது. சனவரி 88 தென்மொழித் திங்களிதழில் ''தமிழகத்தின் இருண்ட சூழ்நிலை மறைந்தது'' என்ற உங்களின் ஆசிரியவுரை கண்டு, தாங்கள் தமிழ் மொழி மீதும், தமிழ் இனத்தின் மீதும் கொண்டுள்ள உண்மையான பற்றுதலே தாங்களை இவ்வாறு ஆசிரியவுரை எழுத வைத்துள்ளது என்பதை எண்ணி வியந்து தாங்களுக்கு ''அஞ்சா நெஞ்சன்'' என்ற பட்டம் சூட்டி மகிழ்கிறேன். வணக்கம் ! —ஆர். பி. சந்திரன். இட்டார்சி. (ம.பி.)

○ : 1267 : வணக்கத்திற்குரிய பாவலரேறு அய்யா அவர்கட்கு, வணக்கம்.

தென்மொழி (சு 23 ஓ 12) ஆசிரியவுரையை மிகத் துணிச்சலாகவே தாங்கள் எழுதியுள்ளீர்கள். உண்மையைச் சொல்லவே அஞ்சும் போலித் தமிழர்கள் நிறைந்து விட்ட சூழலில் உள்ளத்தில் பட்டதை ஒளிக்காமல், உணர்ச்சி வயப்பட்டோ, ஆரவாரப் போக்கோ துளியுமிலாத நிலையில் விளக்கமாக எழுதியிருப்பது கண்டு பெரிதும் மகிழ்ந்தேன்.

எப் பக்கம் சார்ந்தால் நமக்குப் பதவி எலும்புகள் கிடைக்கும் என அலைந்து திரியும் இனஏய்ப்பர்கள் மலிந்து விட்ட காலம்.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்.)

வஞ்சகப் பூனைகள்!

வஞ்சகப் பூனைகள் என்பால் வந்தே
நெஞ்சுரம் மறைத்துச் சிற்சில நேரம்
கொஞ்சியும் அன்பு கொழுவியும் தொண்டினால்
விஞ்சிடும் என்துயர் விளங்கக் கேட்டும்
இரங்குதல் போலும், இனிமேல் துணையாய்
நெருங்க நிற்பது போலும் நெகிழ்ந்துரை
செய்திடும்! இதனைச் சிறப்புற ஒப்பி
எய்யாப் பெருமகிழ் வெய்தி யிருப்பேன்!
ஆனால், ஐயகோ, அவைபுறஞ் சென்று

வீணுரை பரப்பி, வெய்ய உரைத்து — என்
மாண்பினைக் குறைத்திட பற்பல மலவினை
நோன்பெனக் கொண்டு செய்து திரிவதை
எங்ஙன் தடுத்திடற் கியலும்? இப் பூனைகள்
தங்கள் தங்கள் பிறவிக்குத் தக்க —
குணநிலை பெற்றும் குறுமதி யுற்றும்
உணவுக் காகவும் உயிர்ப்பதற் காகவும்,
இவ்வா றியங்கிடல் இயல்பாய் இருக்க
எவ்வா றிவைதமை மாற்றிடற் கியலும்?

பொதுநிலை வாழ்வெனப் புகுந்தவர் — காயும்
கதிரவன் போன்றவர்! காற்றைப் போன்றவர்!
ஓடும் ஆற்றுநீர் ஒத்தவர்! அவரிடைக்
கூடும் மனங்களைக் கோல்கொண் டளந்தே
இன்னவர் இன்ன தன்மையர் — இவரிடம்
என்ன வாறாய் இயங்குவ தென்றெலாம்
கணக்கிட்டுப் பழகுதல் — கரவொடு பயிலுதல் —
எனக்குக் கைவரா எத்துகள் என்க!

ஆற்று நீரையும் அழற்கதி ரொளியையும்
காற்றையும் அவரவர் கருமத்திற் கேற்பவும்,
அறிநிலை மனநிலை அமைவினுக் கொப்பவும்
நெறிமைப் படுத்துதல் நிகழும் உலகியல்.
இத்தகு நிலையில் அவரவர்க் கேற்ப
ஒத்தியங் குதல்எனக் குதவா தென்க!

பயன்படு பொருள்நான்! பலர்க்கும் உரியவன்!
வயன்படல் என்பதென் வாழ்க்கையில் இல்லை!
எதைநான் வெறுப்பது? எதைநான் விழைவது?
விதைநான்! விளைவோ விளைப்பவர் கையுள்!
அதையதை அவரே அமைத்துக் கொள்க!
கதையிலை! கற்பனை கடுகளவில்லை!
பேணாதும் பேணலும் பெற்றவர் கடமை!
வேணாதும் வேட்பதும் வித்துக் கில்லையே!

சிறப்பு மடல்கள் :

1. கல்தூண் பிளந்திறுவதல்லால்..!

பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கங்கள் பல. பெரியீர்! சுவடி 23, ஓலை 12-இல் 'தமிழகத்தின் இருண்ட சூழ்நிலை மறைந்தது' என்ற தலைப்பில் தாங்கள் எழுதிய ஆசிரியவுரை படித்தேன். பன்முறை படித்தேன் ; படித் தேனுக இருந்தது. ம. கோ. இரா. இறந்தவுடன் இத்தமிழகமே கடலில் மூழ்கி விட்டது போன்ற ஒரு மாயத் தோற்றம் திரையிடப் பட்டது. வானொலி, தொலைக் காட்சி, செய்தித்தாள்கள், இதழ்கள் அனைத்தும் ம. கோ. இரா புகழே பாடின. அவர் செய்தவாக என்னென்னவோ ஆக்கங்கள் சொல்லப் பட்டன. அவர் ஆட்சியில் தமிழகமே, இவ்வுலகில் தலை நிமிர்ந்து பீடு நடை போட்டதாகப் புளுகப் பட்டது. ஆனால் தாங்களே அவராட்சியின் 'பீடை' நடையை நன்கு தோலுரித்துக் காட்டினீர்கள். நடுவணரசின் அன்பு தான் என்ன ? நாடு முழுவதும் விடுமுறை. தலைமையமைச்சர் விரைகிறார். குடியரசுத் தலைவர் பறக்கிறார். இன்னும் பல கொத்தடிமை நடுவணமைச்சர்கள் வருகிறார்கள். விளம்பரங்கள் சொல்லி மாளா. நடுவணரசு தமக்குக் கொத்தடிமையாக இருந்தால், அவர்களைத் தாங்கள் எப்படியெல்லாம் தூக்கிப் பிடித்துக் கொண்டு ஆடுவோம், புகழ்வோம், ஆலோலம் பாடுவோம் என்பதை நாட்டிற்கு நன்கு வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டனர்.

இனி, அவரது காலை நக்கி, வாயிலில் எச்சில் இலை பொறுக்கிக் பதவி எலும்புகள் கடித்துச் சுவை கண்ட ஞமலிக் கூட்டங்களின் குரைச்சலோ அம்மம்மா ! சொல்லிமாளாது. "கஞ்சி குடிப்பதற்கில்லார் அதன் காரண மின்னதென்றறியார்" என்று பாரதி பாடி இரக்கப்பட்ட அந்த ஏழை மக்களின் நிலையோ இரங்கத்தக்கது. இரண்டு நாட்கள் உணவே இல்லாமல் பட்டினியோடு பாடி யழுதார்கள். எத்தனை மொட்டைகள், எத்தனை இறுதி ஊர்வலங்கள் ! அவை பற்றிய நிழற் படங்கள் தாங்கிய செய்தித்தாள்கள், இதழ்கள், சொல்லிமாளாது. தாங்கள் குறிப்பிட்டது போல் இவர்களுக்காக, இந்த ம. கோ இரா. செய்தது என்ன ? பத்தாண்டுகளுக்கு மேலாக அரசோச்சிய அவர் இந்த ஏழை மக்களுக்காகப் போட்ட திட்டந்தான் என்ன ? அதனால் அவர்களது வறுமை எவ்வளவு தீர்ந்தது ? எவ்வளவு பேர் முன்னேறினார்கள்? இதை யெல்லாம் எண்ணிப் பார்த்தார்களா ? சரி, அடிமட்டத்தில் இருப்பவர்களாவது, அறியாமையால் அவ்வாறு செய்கிறார்கள் என்றால், படித்த மேதாவிகள் என்போர், இதழாசிரியர்கள் எல்லாம் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுகிறார்களே! அவர்களுக்குத் தெரியாதா இவரது வினைப் பாடுகள் ? இவையெல்லாம் தன்னல மூடத்தனம் தானே ? கூட்டத்தில் 'கோவிந்தா' போடும் இழிநிலை தானே! பார்ப்பன இதழ்கள் இவரின் பெருமைகளைப் பீற்றித் திரிவதிலாவது பொருளுண்டு. ஆனால் திராவிட இனத்தைச் சார்ந்தோர்கள் நடத்தும் இதழ்களும் அவ்வாறுதானே நடக்கின்றன. இவர்கள் எல்லாம் இனம் போன்று, இனமல்லாதவர்கள் தாமே ?

Scanned with CamScanner

இந்த வகையில் தென்மொழி மட்டும், தனது தனித் தன்மையைக் காத்தது மட்டுமன்றி, உண்மையை உள்ளவாறு கூறியுள்ளது. தங்களது துணிந்த கொள்கைக்கும் எப்படிப் பட்டவராயினும் தவறு கண்ட விடத்துத் துணிந்து கண்டிக்கின்ற விறுசால் உணர்விற்கும் இதுவே சிறந்த எடுத்துக் காட்டாகும். இந்திரா காந்தியின் சாம்பலை நாடெல்லாம் தூக்கிக் கொண்டு மக்கள் பணத்தைப் பாழாக்கிய நேரத்தில், அதை எதிர்த்து வழக்கு மன்றம் சென்றது தாங்கள் தாம். அதை இங்கு நினைவு கூறாமல் இருக்க இயலாது. என்னதான் வேடிக்கைகள் காட்டி மக்களை மயக்கினாலும், உள்ளதை உள்ளவாறு உரக்கக் கூற ஒருவர் உள்ளார் என்பதை நாட்டிற்கு உணர்த்தி விட்டீர்கள். உச்சி மீது வானே இடிந்து விழுந்தாலும் அச்சமில்லை என்பதை அவனிக்கு அருமையாக உணர்த்திவிட்டீர்கள். கூட்டம் குறைவாக இருந்தாலும் கொள்கை முழக்கம் ஓயாது என்பதை உணர்த்தி விட்டீர்கள். சொரணையற்ற சோற்றுப் பிண்டங்களாய்த் தன்மானமற்ற மாந்தக் கூடுகளாய்ப் பல்லாயிரவர் இருக்கின்ற இந்தக் காலகட்டத்திலும் அரியேறாய், கொள்கைக் குன்றாய், அச்சத்தைத் துச்சமாய் எண்ணி, மான உணர்வுடன் வீர முழக்கம் செய்யவும் சிலர் இருக்கிறார்கள் என்பதைத் தங்கள் வீறுரை விளக்குகிறது. சில நேரங்களில் மேகங்கள் திரண்டு பகலவனை மறைத்து விட்டாலும், பகலவன் மறையான். மேகக்கூட்டங்கள் விரைவில் மறையும். ஒளி தோன்றும். இன்றைய கால கட்டம் உண்மையாகிய பகலவனைப் பொய்யும், புனை சுருட்டும், தன்னலமும் சாதி, சமய வெறிகளும் ஆகிய மேகங்கள் சூழ்ந்துள்ளன. அம்மேகத்தை விரட்டும் புயலாய் விளங்குகிறீர்கள் என்பதற்கு அவ்வுரையே சான்று.

வயிற்றையும், பணப் பெட்டியையும் நிரப்புவதே பெருமை, என்று எண்ணுவோர் நிறைந்த கால கட்டத்தில், "வயிறு காய்ந்தாலும் மானமே பெரிது, பணம் இல்லையானாலும் கவலை இல்லை, கொள்கைக்கே என் வாழ்க்கை, இன நலனே மூச்சு, தமிழகத்தைத் தலை நிமிரச் செய்வதே என் வாழ்க்கையின் குறிக்கோள்" என்று முழங்குகின்ற தாங்கள் உண்மையிலேயே சங்க காலப் பெருஞ்சித்திரனாரின் மறு பிறப்புத் தாம்! இன்றைய பொல்லாத மாந்தர்களாகிய வைக்கோல் போரின் ஊடே உள்ள ஒரு சிறு நெருப்புத்துண்டு தான் தாங்கள். அது காலத்தின் கட்டாயமாகிய காற்று வீச வீச, நெருப்பு மூளத்தான் போகிறது; வைக்கோல் எரிந்து சாம்பல் ஆகத்தான் போகிறது. அதற்கு ஒரு முன்னறிவிப்புப் போன்றதே அவ்வுரை.

உலக வரலாற்றில் இடம் பெற்ற அரிய செயல்திறவோர்கள் பணத்துக்காகப் பல்லிளித்தோர் அல்லர்; பதவிக்காக மானமிழந்தோர் அல்லர்; வறுமைக்கு அஞ்சி மாற்றான் காலில் மண்டியிட்டோர் அல்லர்; உண்பதும், உறங்குவதும் உணர்விற்கு இரைபோடுவதுந்தான் வாழ்வென வாழ்ந்தோர் அல்லர்; கற்றூண் பிளந்திறுவதல்லால் பெரும் பாரம் தாங்கின் தளர்ந்து

வளையுமோ தான்'', என வாழ்ந்தவர்கள். அத்தகையோர்க-ளால்தாம் உலகம் மாற்றங்களைப் பெற்றுள்ளது. அத்தகைய கொள்கை மறவர் வரிசையில் தாங்கள் முன்னணி வீரராக இருக்கிறீர்கள் என்பதற்கு, எத்தனையோ பாடல்களும் கட்டுரைகளும் இருக்கின்றன. இருந்தாலும் அவற்றிற்கு மேலும் வலுவூட்டும் சான்றாக விளங்குவது இவ்வாசிரியவுரை. எல்லா மக்களையும் எல்லாக்காலமும் ஏமாற்ற முடியாது. மக்கள் விரைவில் உண்மையை உணரத்தான் போகிறார்கள். அப்போது இந்த ஏமாற்றும் இழி மக்களும், மானமற்ற பிறவிகளும், சூது மதி கொண்ட தீயவர்களும் அழிக்கப்படத்தாம் போகிறார்கள். அதன் பின்னர்தான் இந்நாடு உருப்படப் போகிறது. அதன் பிறகு ஊதாரிகளும் ஒழுக்கமற்ற தசைப் பிண்டங்களும் முகாமை பெற முடியாது. அவற்றிற்கெல்லாம் தங்களுடைய மேற்கூறியது போன்ற ஆசிரியவுரைகள் பெருந்துணைபுரியும் என்பதில் ஐயமில்லை. இத்தகைய நடுநிலையாளர் கூட்டம் இன்று குறைவானதாக இருக்கலாம். இனி வளர்வது நடுநிலையாளர் கூட்டமாகத்தான் இருக்கும். அழிம்பர் கும்பல் உச்சநிலை அடைந்து விட்டது. இனி அக்கும்பலுக்கு, அழிவுதானே தவிர வளர்ச்சியில்லை. உலக வரலாற்றறிஞர் வரிசையில் தாங்களும் இடம் பெறுவீர்கள் என்பதில் ஐயமில்லை. வளர்க தங்கள் பணி ! — புலவர். அறிவுடை நம்பி. மூலனூர்.

2. தமிழினம் பேணிக் கொள்ளட்டும்.

உண்மைமிகு பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம். தமிழ்நிலம் இதழ் எண் 97-இல் ''தமிழக முதல்வர் மறைவு குறித்து, ஆசிரியர் அவர்களின் கருத்தைத் தென்மொழி சு. 23 ஓலை 12-இல் காண்க'' என்றிருந்தது. நான் எண்ணினேன். ம.கோ.இரா அவர்களின் மறைவை ஆழ்ந்த கவலை தெரிவித்து மற்றைய தாளிகையில் போற்றி எழுதியது போலவும், வானொலியில் 'அவரைப் போல ஓர் அறிவார்ந்த அரசியல் அறிஞன் இதற்கு முன் தோன்றவும் இல்லை, இனித் தோன்றவும் முடியாது' என்று வரை முறையற்ற அளவிற்கு அறிவிக்கப்பட்டது போலவுந்தான் ஐயாவும் எழுதுவார்கள் என்றிருந்தேன்.

ஐயாவின் உரையை எதிர்பார்த்திருந்தேன். சென்ற திங்கள் தென்மொழி பிந்தி வந்தமையால் ஒரு வேளை எனக்கு அனுப்பவில்லையோ என எண்ணி ஒரு கடிதமும் எழுதிய அன்றே இதழ் வந்து சேர்ந்தது. விரைவாக உடைத்து இதழின் முதல் பக்கத்தைத் திறந்து பார்த்தேன். 'தமிழகத்தின் இருண்ட சூழ்நிலை மறைந்தது' என்ற தலைப்பைக் கண்டதும் விரைவு விரைவாகக் கீழே படித்தேன். ''அடடா ! எத்தனைப் பெரிய உண்மைகள் ! எவ்வளவுத் துணிச்சல் ! எதற்கும் அஞ்சா நெஞ்சம் ! எந்த புகழ்ச்சியையும் எதிர்பார்த்து வாழாத வாழ்க்கையை இத் தமிழ் நிலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் ஐயா'' என்பதை உணர்ந்தேன். ஐயாமீது இயல்பாக உள்ள என் பற்றுதலே அக் கட்டுரை ஊக்கி எழுப்பியது.

இன உணர்வைப் பற்றித்துள்ளித் துள்ளி விரித்துப் பேசுபவர்களுக்குக்கூட உண்மையை உள்ளபடி கூறும் துணிவு வரவில்லை. பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்களுக்கு மட்டுந்தான் அத்துணிவு வந்தது.

இவரன்றோ உண்மையான தமிழுணர்வு கொண்ட தமிழினத் தலைவர் என்பதை அக்கட்டுரை உலகுக்கு எடுத்துக் காட்டிற்று.

ம. கோ. இரா. அவர்களால் இந்நாடு சீரழிந்து கொண்டிருக்கும் நிலையைத் தமிழர்கள் சிறிதளவாகிலும் எண்ணிப் பார்த்தால் அவருக்குக் கோவில் கட்டத் துணிவார்களா? அந்த அளவிற்கு அவரிடம் எவ்வகை ஆற்றலும் இல்லை. இந்த உண்மை அனைவருக்கும் தெரியும். ஆனுல் அவரால் கொள்ளையடித்து வளம் சேர்ப்பவர்களும், மக்களை மூடர்களாக்க அவரின் செயல்கள் இருந்தமையால் அதனை வரவேற்று மக்களை முட்டாள்களாக ஆக்கத் துடிப்பவர்களும், அவரின் நடிப்பை நடப்பு என்று எண்ணி ஏமாறிய தமிழர்களும் பலர் இங்கு வாழ்கிறுர்களே! அதனுல் தமிழ் நாட்டின் நிலை குலையத்தானே செய்யும். மக்களின் நிலைகளை அணு அணுவாக ஆய்ந்த ஐயாவின் அறிவு, மக்களுக்காக இரங்கும் உள்ளம் பட்டென்று தெரிய அதில் வரும் ஏசுவின் கூற்று சான்ருக அமைந்துள்ளது.

''இனநலம் எல்லாப் புகழும் தரும்'' என்ற வள்ளுவரின் வாய்மொழிப்படி யாவரும் ஐயாவைப் புகழ வேண்டாம். அந்த இனநலமே ஐயாவிற்கு எல்லாப் புகழையும் தரும். எவரும் கொடுக்க வேண்டாம். தானுகவே வந்து சேரும். இந்த உண்மைத் தமிழ்த் தொண்டனைத் தமிழர்கள் காக்க வேண்டும். அல்லது தமிழ் நிலம் அடிமையிலிருந்து மீளாது. இது வெறும் புகழ்ச்சியில்லை ; உண்மை.

இன்னென்றையும் இக் கடிதத்தில் சுட்ட ஆவல். அதே இதழின் அட்டையின் உள் பக்கத்தில் புதுவை, கணியன் அவர்களால் எழுதப்பட்ட கடிதம் ஒன்று உள்ளது. அவ்வன்பர் ஐயா மீது கொண்ட அன்பாலும் உரிமையாலும் அதனை எழுதுவதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். நல்லதே. ஈழத்தமிழர்களைப் பற்றி எழுதாமல் எதை எதையோ எழுதி இருப்பதாய் ஐயா மீது குறை பட்டுக் கொண்டுள்ளார்கள். அன்பார்ந்த அவ்வன்பருக்கு நினைவூட்டுகிறேன். தமிழ் நிலம் இதழில் தமிழீழப் போராட்டம் தொடங்கிய காலமுதல், திம்புப் பேச்சு ஊடாக, இன்றுவரை மிக மிக அழுத்தம் திருத்தமாக திரு. இராசீவ் அவர்களின் கரவான எண்ணத்தின் நிகழ்வுகளை முன் கூட்டியே ஐயா அவர்கள் தமிழர்களுக்கு எழுதி வருகிறுர்கள். எனவே இரக்கஞ்செய்து தமிழ் நிலம் இதழை விடாமல் படிக்க வேண்டுகிறேன். தமிழீழத்தைப் பற்றியச் செய்திகளை இன உணர்வோடு அவ்வப்போது தமிழீழ நிலைகளை உணர்த்தி இருக்கிறுர்கள்.

(தொடர்ச்சி 16-ஆம் பக்கம்.)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[திருவணம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி — இனம் — நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை-முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும்.
இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க
வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்
களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடி
யாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு
விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும்
மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய
பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ்
மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்
னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும்,
மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடு
பட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும்
விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான்
நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர்
ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், தென்மொழி
ந. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி
நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி
எசுஆர். பிரான்சிசு, தென்மொழி கா.இளமுருகன், தென்மொழி
த. தானியேல் செபராசு, தென்மொழி அரசத் தொகையன்,
தென்மொழி கதிர் மதியன், தென்மொழி இரா. பாலகங்காதரன்
பாவலர். சா. சி. சுப்பையா, பாவலர். அ. பு. திருமாலனார்,
தென்மொழி த. அரிமா வளங்கோ; பொன். பாலகிருட்டிணன்.
பாச்சுடர். புலவர். இரா. வடிவேலனார். க. மு, கல், இ;
மருத்துவர்.சி. இராமச்சந்திரனார், வழக்கறிஞர். பொன்னெழிலன்
செங்கோட்டையா நல்லையா. (தொலைபேசி : 847829

சுவடி 24] உ0கசு சுறவம்-கும்பம் (பிப்-மார்'88) [ஓலை 1-2

ஓ! பிரபாகரனே! கதிர்க் கையனே! நீ எங்கே இருக்கிறாய்?

ஓ! பிரபாகரனே! கதிர்க் கையனே!
தமிழீழத்தின் அடிமையிருள்
போக்க வந்த வீரத்திருச்சுடரே!
தமிழினத்தின் தன்மான ஒளிவிளக்கே!
இந்திய நாய்களின்
வேட்டை மானே!
நீ எங்கே இருக்கிறாய்?

உன்னைச் சுட்டுக் கொல்லப் போவதாய்—
உன் ஆர்த்த அரியணை மேனிக்குக்
குறிவைத்திருப்பதாய்ச் —
சொல்லிச் சொல்லி
எள்ளி நகையாடுகிறார்களே,
இராசீவின் வஞ்சக வேடர்கள்!
தஞ்சம் கோராத தமிழனே!
அஞ்சாமையின் தொகுப்பே!
நீ, எங்கே இருக்கிறாய்?

கனிவுக்குக் கைகொடுத்து,
கல் போன்ற நின் தோளை நீவி, — உன்
கழுத்துக்குக் கத்திவைக்கும் எத்தர்கள்,
உன்னைச் சுட்டுப் பொசுக்கக்
குறிவைத்துத் திரிகிறார்களாமே!
மறம் மாண்ட தோற்றமே!
அறம் மாண்ட தமிழினத்தின்
ஆற்றல் மறவனே!
விழுப்புண் வேங்கையே!
நீ எங்கே யிருக்கிறாய், சொல்!

பேராண்மையனே! வீரப் பெரியோனே!
ஊறஞ்சா வெல்படைத் தலைவனே!
இந்திய எலிப் பகையை
உயிர்த்தழிக்கும் நாகமே!
உன் உயிர்க்கு விலைபேசிய போதும்,
உள்ளம் நடுங்காத
தமிழினத் தானைத் தலைமகனே!
உன்னை ஓர் இலக்கம்
கொல் படையும் ஊர் ஊராய்,
காடு காடாய்த்
தேடி வருகிறார்களாமே!

அடல் தகையும் ஆற்றலும் சான்ற
படை வேந்தனே!
உன் விளையாட்டுக்கு
முற்றுப் புள்ளி வைக்க,
இந்திய சூழ்ச்சிப் படைகள்
கைகளில் கருவி யேந்திக்
கண்களில் சூழ்ச்சி யேந்தி
உலா வருகின்றனவாமே!
நீ, எங்கே இருக்கிறாய்!
சொல் மகனே! சொல்!

கூற்றுடன்று மேல்வரினும்
கூடி எதிர்க்கும் ஆற்றலே!

Scanned with CamScanner

வேல் கொண்டு எறியினும்
அழித்திமைக்கா விழித்த கண்ணனே!
இராசீவுக்கு,
உன் செங்குருதி வேண்டுமாம்!
உன் புடைத்து விம்மிய தோள்களும்
உடல் தசைகளும் வேண்டுமாம்!
உடல் புதைபோய், உனை வீழ்த்த
வெறி கொண்டலைகிறது அந்த
வீணப் பிறவி!

எதிரி விரகர்களுக்கு
எரிமலையே! ஏற்றமே!
உன் தோற்றமே
தொள்ளாயிர இந்திய வீரர்களை
மலைத் தோடச் செய்யுமென்றால்
உன் நெஞ்சாங்குலையைத் தின்ன
நீட்டிய வேட்டைக்கத் தோடு,
அலையோ அலையென்று
அலைகின்றார்களாமே, இந்திய
வேட்டை நாய்கள்!
நீ எங்கே உழல்கிறாய்' சொல்!
எந்தக் காடு மேடுகளில்
அல்லாடுகின்றாய், சொல்!

வெட்சிக் கானத்து
வேட்டுவர் ஆட்டும்
கட்சி காணாத
கடமா நல்லேறே!
புறநானூற்றுச் செல்வமே!
தமிழர் வீரப் புதையலே!
கடந்த ஐந்தாண்டுக் காலமாய்
நூறாயிரம் இந்தியக் கழுதைகள்
மேய்ந்து தின்னும்
நுனி மழுங்கவில்லை — எம்
தமிழரின் வீரம் — என்று,
பனி உலகுக்குப் பறைசாற்றும்
பழம் பாண்டியத் திருமறமே!

சுழலும் இசை வேண்டி
உயிர் வேண்டா வீரனே!
உயிர் அஞ்சா மறவனே!
உலகில் வேறெந்த வீரனுக்கும்
இல்லாத ஓங்கிய பெருமை
உனக்குண்டு ; உன் வீரருக் குண்டு!
உலகின் மூன்றாம் வலிமை வாய்ந்த
இந்தியப் படைக்கே சூளுரைத்தாய், நீ!

முயல் வேட்டை யன்று, நீ
விளையாடுவது!
யானை வேட்டை! ஆம்!
காட்டு யானை வேட்டை!

வீட்டுக்காக வன்று நீ போரிடுவது!
நாட்டுக் காக! தமிழீழ நாட்டுக்காக!
நாற்பத்தைந்து இலக்கம்
தமிழர்க்காக, உன் தோள்கள்
புடைத்து வீறு கொண்டெழுந்தன!
உன்னைச் சுற்றி ஓர் இலக்கம்
எதிரிப் படைப் போர் மறவர் !

நாலு பக்கம் வேடர் சுற்றிட
நடுவில் சிக்கிய மான்போல்,
நீ வேட்டையாடப் படுகிறாய் !
கழகத் தமிழினத்தின்
கவின் தொகுப்பே !
நீ எங்கே இருக்கிறாய் ?

இலங்கையில் இராவணன் இருந்தாலன்றோ
உனக்குத் துணைவருவான் !
நீ இருப்பதோ, பகைவரின் வீடு !
நீ உழல்வதோ வல்லிருள் காடு !
உனக்குத் துணை உன் பீடு !
உருப்படுமா இந்த நாடு ?
பகைவர் கைகளில்
அகப்படாத அருந்தமிழ்ப் பேறே !
அன்னைத் தமிழீழத்தின்
ஒரு தனி மகனே !

ஒப்பற்ற தமிழின வீறே !
முன்னை, கடந்த
ஈராயிரம் ஆண்டு
முதுமை அடிமை விலங்கை
முறித்தகற்ற வந்த சீரே !
முடிந்ததடா உன்னோடு
தமிழினத்தின் விடுதலைப் போரே !
அகன்ற வானின்
அல்லல் நிலாவே !
புகன்று விடு! நீ எங்கே
புறப்பட்டுப் போனாய் ?
எங்கே இருக்கிறாய் ?

ஐந்து கோடித் தமிழர்கள் இங்கே
உனக்காக அன்றாடும்

தவமிருக்கிறோம் !
உயிர் நோன்பு நோற்கிறோம் !
உன்னை நோக்கி
உழலும் உயிரைத் தேக்கி,
உன் கொள்கை முயற்சியை ஊக்கி
உனக்குதவுவோம் பகையைப் போக்கி !
செங்களம் துழாவும்
செங்கதிர்க் கையனே !

எங்களை விடுவிக்க வந்த
ஏந்தலே !
எங்கே நீ இருக்கிறாய் !
அங்கே நாங்களும்
உன் உடனே இருக்கிறோம் !

அஞ்சாதே ! நீ !
அனைவரும் உன்
உயிரோடு உயிராய்ப்
பின்னிப் பிணைந்திருக்கிறோம் !

ஆற்றல் மறவனே !
அமைந்ததடா விடுதலை ஈழம் !
அழியாமல் விளங்கிடுறடா
உன் புகழ் !
நீ வாழ்க !
உன் கொடிவழி வாழ்க !

'கனிச்சாறு' தொகுதிகள் !

மெய். மு. ஆய்வுக்கு !

மன்னார்குடியைச்சேர்ந்த திரு. மணி அறவாழி சு.மு. அவர்கள், பாவலரேறு அவர்களின் 'கனிச்சாறு பாடல் தொகுதிகளை'த் தம் மெய். மு. (M.Phill) பட்டத்திற்கென ஆய்வு செய்து கொண்டிருக்கிறார் என்பதை அன்புடனும் மகிழ்ச்சியுடனும் தெரிவித்துக் கொள்கிறோம். அவருக்குப் பூண்டி, புட்பம் கல்லூரிப்பேராசிரியர் பர். சி. ஆர். கிருட்டிணமூர்த்தி வழிகாட்டியாக உள்ளார்.

இவருடன் பாவலரேறு அவர்களின் நூல்களை ஏறத்தாழப் பத்துப் பேர்கள் தங்கள் மெய். மு. ஆய்வுகளுக்கென்றும், முனைவர் (Phd) ஆய்வுகளுக்கென்றும் எடுத்து ஆய்ந்திருக்கிறார்கள் ; ஆய்ந்து வருகிறார்கள் !

தமிழகத்திலேயே பாவலரேறு அவர்களின் நூல்களைத்தாம் இத்தனை ஆய்வாளர்கள் தம் அறிவாண்மைப் பட்டங்களுக்கென்று மிகுதியாக ஆய்ந்து வருகிறார்கள் என்பதை அறிவிக்க மேலும் மகிழ்வடைகின்றோம்.

—அமைச்சர்.

வழக்கில் பயிலும் சில வியத்தகு சொற்கள்.

சொல்	மொழி	பொருள்	தமிழ்
உருது	அரபி	முகம்மதிய வீரர், தாம் தங்கியிருந்த படைப் பாசறையில் பயன்படுத்திய பாரசீகம், அரபி, இந்தி ஆகிய மொழிகளின் கலவையாலாகிய ஒரு கூட்டு மொழி.	படை, பாசறை.
அபிராமி	சமற்கிருதம்	—	நல்லழகி.
காபரே	ஆங்கிலம்	மர அமைப்புள்ள ஆடலரங்கில் ஆடும் ஆட்டம்.	நளிக ஆட்டம்.
கோதா	உருது	—	மற்களம், மல்லகம்.
சத்தம்	சமற்கிருதம்	நூற்றில் ஒரு பகுதியாகிய காசு (Cent) அதன் அடிப்படையிலேயே 'வண்டிச்சத்தம்' என்ற தொடக்க வழக்கு, இன்று 'வண்டிச்சத்தம்' என்றவாறு திரிபெய்தி வழங்குகிறது.	கூலிகை.
சாப்ஸ்	ஆங்கிலம்	துண்டு துண்டாக வெட்டப் பெறும் கறி. Chop-cut. துண்டம்.	குறம்புக் கறி.
சாஷ்டாங்கம்	சமற்கிருதம்	இரு கை, இரு முழங்கால், இருதோள், மார்பு, நெற்றி ஆகிய எட்டுப் பகுதி உறுப்புகளும் நிலத்தில் தொடுமாறு தோய்ந்து படுத்து வணங்கும் வணக்க முறை.	நெடுங்கிடை, நெடுஞ்சாண் கிடை.
சுவிசேஷம்	சமற்கிருதம்	சு-விசேஷம் நல்ல செய்தி.	நற்செய்தி.
பாயா	உருது	உண் பொருளிலிருந்து இறக்கிய சாற்றுக் குழம்பு.	சாற்றுக் குழம்பு.

சொல்லாய்வறிஞர் ப. அருளி 'இவை தமிழல்ல' —நூல்.

6-ஆவது உலகத்தமிழ் மாநாட்டு அழைப்பும், ஆசிரியர் விடையும்.

(கடந்த நவம்'87- இல் மலேசியாவில் நடைபெற்ற 6-ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு வருமாறு பாவலரேறு அவர்களுக்கு அழைப்பு வந்தது. ஆனால் அம் மாநாட்டில் கலந்து கொள்ள இயலாமை குறித்து ஆசிரியர் விடை மடல் ஒன்று எழுதினார். இரண்டும் அன்பர் பார்வைக்குத் தரப்பெறுகின்றன. அழைப்பு மடல் திருத்தம் பெறாமல் அப்படியே வெளியிடப் பெறுகிறது.)

வணக்கம்.

ஆறாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை வெற்றியுடனும், சிறப்புடனும் நடத்துவதற்கான ஏற்பாட்டுப் பணிகள் யாவும் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியுடனும், அன்புடனும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த மாநாடு எதிர்வரும் 1987 நவம்பர் திங்கள் 15ம் தேதி முதல் 19ம் தேதிவரை கோலாலம்பூரில் உள்ள மலாயாப் பல்கலைக் கழகத்தில் நடைபெறவிருக்கின்றது. இதனை அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை, உலகத் தமிழர் மாமன்றம் ஆகிய மூன்றும் இணைந்து நடத்துகின்றன. மலேசிய அரசாங்கத்தின் முழு ஆதரவும், ஒத்துழைப்பும் இந்த தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு கிடைத்திருக்கின்றது. மலேசியப் பிரதமர் டத்தோ ஸ்ரீ டாக்டர் மகாதீர் முகம்மது அவர்கள் மாநாட்டின் புரவலராக இருப்பதுடன் மாநாட்டைத் தொடக்கி வைக்கவும் இசைந்திருக்கின்றார்.

சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பேராளர்களாகவும் பார்வையாளர்களாகவும் மாநாட்டில் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை எங்களுக்குக் கிடைத்துள்ள ஆதரவும், ஊக்கமும் உற்சாகம் தரக்கூடியதாக உள்ளது. மோரிஷியஸ் நாட்டு கல்வி அமைச்சர் மாண்புமிகு பரசுராமன் அவர்களும், இலங்கை வட்டார மேம்பாட்டு அமைச்சர் மாண்புமிகு செல்லையா ராஜதுரை அவர்களும் அரசு சார்பில் அந்தந்த நாட்டு அரசுப் பிரதிநிதிகளுக்குத் தலைமைதாங்கி மாநாட்டில் கலந்து கொள்ள இசைவு தந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கின்றேன்.

தமிழியல் ஆய்வுத்துறைகளில் முன்னணியில் உள்ள அறிஞர்கள் பலர் மாநாட்டில் ஆய்வுக் கட்டுரைகள் படைக்க முன்வந்திருப்பதும் எங்களுக்கு ஊக்கம் அளிக்கிறது. அனைத்துலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தின் தலைவர் பேராசிரியர் ஆஷர் அவர்கள் இம் மாநாட்டில் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரை படைக்கவிருக்கின்றார் என்பதையும் இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன். ஆய்வரங்குகளுடன், கலை நிகழ்ச்சிகள், மலேசியத் தமிழர் வரலாறு மற்றும் பண்பாட்டினை பிரதிபலிக்கும் ஒரு கண்காட்சி ஆகியவையும் இடம்பெற ஏற்பாடுகள் செய்து வருகின்றோம். இவற்றோடு,

Scanned with CamScanner

வெளியூர் அறிஞர்களின் சொற்பொழிவுகள், சிறப்பு விருந்து முதலானவையும் நிகழும்.

மாநாட்டின் அழைப்புக் குழுவின் சார்பில் தங்களை மாநாட்டில் கலந்து சிறப்பிக்குமாறு அழைப்பதில் அதிக மகிழ்ச்சியடைகின்றேன். தமிழ் எழுத்துத் துறையில் முன்னணியில் இருக்கும் எழுத்தாளர்களில் ஒருவரான தாங்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்வது முக்கியமானது என கருதுகின்றோம். தங்களின் பங்கேற்பு மாநாட்டை மேலும் சிறப்படையச் செய்யும் என்பதில் எங்களுக்கு ஐயமில்லை. குறிப்பாக இன்றைய தமிழ் சிறுகதை, புதினம், கவிதை, பத்திரிகைத்துறை, பயண இலக்கியம் ஆகியவற்றைப் பற்றிய கருத்துக்களை தாங்கள் அந்தந்த ஆய்வரகங்களில் நடைபெறும் விவாதங்களில் வெளிப்படுத்தி மாநாட்டிற்கு செவ்வனே பங்காற்றலாம்.

எங்களுடைய இந்த அழைப்பினை ஏற்று மாநாட்டில் கலந்து கொண்டு அதன் வெற்றிக்கு பலவகையிலும் தாங்கள் ஆக்கம் தருவீர்களென ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். மாநாட்டின் ஏற்பாட்டுக்குழு தாங்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்ள எல்லாவித முயற்சிகளையும் எடுத்துக் கொள்வீர்கள் என்று எதிர்பார்க்கிறது.

கூடிய விரைவில் தங்களின் கனிவான பதிலை பெரிதும் எதிர்பார்க்கின்றோம்.

பணிவன்புடன்,

— த. மாரிமுத்து.

(பேராசிரியர் டாக்டர் த. மாரிமுத்து) பொதுச் செயலாளர்

(ஆசிரியர் விடை மடல்.)

பேரன்புடையீர்,

பொருள் : ஆறுவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு: 15-19. நவம்பர் 1987.

பார்வை : தங்கள் பொதுமடல் 24.11.87.

1. தாங்கள் அன்புடன் விடுத்து வைத்த பொதுவான அழைப்பு மடல் இன்று கிடைக்கப் பெற்றேன். மகிழ்ச்சி. நன்றி.

2. இதுபோலும் ஒரு மடல் முன்னரே திரு. டேவிட் அவர்கள் அனுப்பியிருந்தார்கள். அதற்கும், தங்களுக்கு இதில் தெரிவிக்க விருக்கும் கருத்துகளைப் போலவே ஒரு மடலை அனுப்பியிருந்தேன்.

3. தாங்கள் நடத்தவிருக்கும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, முன் மாநாடுகளைப் போலன்றி, ஒரு சிறப்பு வகையில் கூட்டப் பெறும் மாநாடாக இருக்கும் என்பதை, இதுவரை அது தொடர்பாக அறிவிக்கப்பெற்ற செய்திகளிலிருந்து தெரிய வருகின்றேன். மகிழ்ச்சி.

4. ஆனாலும், அம் மாநாட்டில் எம் போலும் ஏழ்மை நிலையில், எந்த வகை அரசு உதவியோ, சாதி, கட்சி, மதம் போன்றவற்றின் உதவியோ இல்லாமல், தனித்த நிலையில் பல்வேறு வகை

யான இடர்ப்பாடுகளுக்கும் இடையில், பல்வேறு வகையான பொறுப்புகளை எடுத்துக் கொண்டு, செயலாற்றி வருகின்ற அறிஞர்கள் கலந்து கொள்ள இயலாமல் உள்ளார்கள் என்பதையும், இதில் எம் நிலையும் அதற்கு வேறானதில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

5. தங்கள் மடலில் மாநாட்டின் தனிப்பட்ட சிறப்பு நிலைகளைக் கூறி, அதில் கலந்து கொள்ள வேண்டிய இன்றியமையாமை பற்றியும் வலியுறுத்தியிருத்தீர்கள்.

6. மாநாடு எவ்வளவுக் கெவ்வளவு சிறப்புற அமையும் என்பது பற்றித் தங்கள் மடலில் வலியுறுத்தியிருக்கின்றீர்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு நான் அதில் கலந்து கொள்ளப் பொருளியல் நிலையில் இயலாத பொழுது நான் அதில் எவ்வாறு கலந்து கொள்ள இயலும் ?

7. பொதுவாக ஒரு மாநாட்டு நடைமுறைகளும் செயற்பாடுகளும் எவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றனவோ, அவ்வளவுக்கு அதில் கலந்து கொள்ள வேண்டியவர்களும் அந்த மாநாட்டின் குறிக்கோளுக்கேற்ப சிறப்பானவர்களாக இருத்தல் வேண்டும். அவ்வாறு பார்க்கையில் தங்கள் மாநாட்டில் கலந்து கொள்ள இருப்பவர்களாக அறிவிக்கப் பெற்றுள்ளவர்கள், தாங்கள் அறிவித்த மாநாட்டின் குறிக்கோள்களை நிறைவேற்றும் அளவிற்குச் சிறந்தவர்களாகத் தென்படவில்லை.

வெறும் பதவியும் அதிகாரமும் கொண்டவர்கள் தமிழ் வளர்வதற்குரிய செயற்பாட்டுக் குரியவர்களே அன்றி, அஃது எவ்வாறு வளர்க்கப் பெற வேண்டும் என்னும் ஆராய்ச்சிக் குரியவர்களாக இருப்பார்கள் என்று சொல்வதற்கில்லை.

8. இனி, மாநாட்டின் குறிக்கோளுக்கு உகந்தவர்கள் எம் போல் இயலாத நிலையிலும் இருக்கலாம்.

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். —என்னும்,

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பாவலரேறு அவர்களின் சொற்பொழிவுகள் !

வரும் 28-3-88 திங்கள் அன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், கீழ் வரும் தலைப்புகளில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் இரண்டு ஆய்வுச் சொற்பொழிவுகள் நிகழ்த்தவிருக்கிறார்கள் என்பதுடன், அக்கம் பக்கத்து ஊர்களில் உள்ள தென்மொழி, தமிழ்நிலம், உ. த. மு. க. அன்பர்களும் வந்து கேட்டுப் பயன் பெறுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

அன்று காலை 'தூய தமிழ் இற்றை அறிவியல் காலத்திற்குப் பொருந்துவதா?'

அன்று மாலை 'திருக்குறளும் இன நல முன்னேற்றமும்'

—அமைச்சர்.

குறள் மொழிக்கேற்ற அளவில் நல்கூர்ந்தவர்கள் நாங்கள். இதுவரை, கடந்த நாற்பது ஆண்டுகளாக எந்த வகையான ஆரவாரமோ விளம்பர வேடிக்கைகளோ இன்றி, அமைதியான முறையில் உண்மையான தமிழ்த் தொண்டும், தமிழினத் தொண்டும் செய்து வருபவன் நான்.

என்னைப் போல் ஒருசிலராகிலும் இத்துறையில் ஈடுபட்டு ஆங்காங்குத் தமிழ்த் தொண்டு செய்து கொண்டிருக்கலாம். அத்தகையவர்களும், மாநாட்டில் கலந்து கொண்டு கருத்தறிவிக்க வேண்டிய இன்றியமையாதவர்களே! ஆனால் அவர்களும் நானும், பொருளியலாமை காரணியமாகத் தாங்கள் சிறப்பித்துக் கூறும் இம் மாநாட்டில் கலந்து கொள்ள இயலாதே ; என் செய்வது?

9. எனவே, அமைச்சர்களும், அரசியல் பதவி, அதிகாரக்காரர்களும் மாநாட்டில் கலந்து கொள்வது, ஒரு சில காரணியங்களுக்கு ஆக, எவ்வளவு முகாமை என்று கருதியிருக்கிறீர்களோ, அவ்வளவு முகாமையானது என்னைப் போன்றவர்கள் கலந்து கொள்வதும் என்று மாநாட்டுப் பொறுப்பிலுள்ள தங்களைப் போன்றவர்கள் கருதியிருக்க வேண்டும். ஆனால் தாங்கள் அவ்வாறு கருதவில்லை என்று தெரிகின்றது.

10. இதில் இன்னொன்றையும் கருத்தில் வைக்க வேண்டும்; மாநாட்டுக் குறிக்கோளுக்குச் சிறு அளவிலும் பொறுத்தமற்ற சிலர், அதிகார ஆட்சித் தொடர்புள்ளவர்கள் என்பதால், அவர்கள் மாநாட்டுக்கு வந்து போகும் அளவுக்கும் மிக அதிகமாகவே பொருள் வளம் படைத்தவர்களாகவே இருந்தாலும், அவர்களுக்கு, மாநாட்டுச் செலவில் வந்து போகும் வாய்ப்பளிக்கும் நீங்கள், மாநாட்டுக் குறிக்கோளுக்கு மிகவும் இன்றியமையாத என் போன்றவர்களுக்கு, ஏன் அத்தகைய வாய்ப்பை நல்கவில்லை-நல்கக் கூடாது-என்பது தான் மிகவும் வியப்பான செய்தியாக உள்ளது. ஒருவேளை எங்களைப் போன்றவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்று கருதுகிறீர்களோ என்று நாங்கள் கருதுவதில் என்ன தவறிருக்க முடியும்?

11. அவ்வாறு தாங்களும் தங்களைச் சார்ந்த பிறரும் கருதவில்லையானால், ஏன் எங்களுக்குத் தேவையான வழிச்செலவுத் தொகையை அல்லது வானூர்திச் சீட்டையும் பிற முன் பணவைப்புத் தேவைகளையும் அனுப்பி—அல்லது செய்து—எங்களையும் மாநாட்டில் கலந்து கொள்ளும் படி செய்திருக்கக் கூடாது?

12. எனவே, தாங்களும், தங்களைச் சேர்ந்த வசதி வாய்ப்புள்ளவர்களும் எங்கள் வருகையையே விரும்பவில்லை என்பதை வெளிப் படையாகத் தெரிவிக்கவில்லையானாலும், உள்முகமாகத் திட்டமிட்டுள்ளீர்கள் என்று தெளிவாகத் தெரிகிறது.

13. இதுபோல், என் சார்பாகத் தென்மொழி அமைச்சர் எழுதிய மடலுக்கு, மாநாட்டு அமைப்பாளர்கள் 'மாநாட்டுப் பொருள் நிலை அதற்கெல்லாம் இடந்தரவில்லை' என்று எழுதியி

Scanned with CamScanner

ருந்தார்கள்: பின் எது எதற்கெல்லாம் மாநாட்டுச் சார்பாகத் திரட்டப் பெறும். அல்லது மலேசிய அரசு உதவும் பொருள் செலவிடப் பெறுகிறதோ, நான் அறியேன்.

14. இனி, இவ்வளவு எழுதியும் என்னை மாநாட்டுக்கு வரச் செய்து விடுவீர்கள் என்று நான் கனவிலும் கருதிவிடவில்லை. உண்மை அறிஞர்களை, அவர்களின் அறிவு முயற்சிகளை அடையாளம் கண்டு கொள்ளவும், கண்டு கொண்டாலும் அவற்றை மதிக்கவும் முன்வருகிறவர்கள், இப் பாழான தமிழகத்தைப் போலவே அங்கும் இல்லை என்றே நான் கருதுகின்றேன். அதற்காக யாரைத் நொந்து கொண்டு என்ன தான் விளைந்து விடப் போகிறது ?

15. தாங்கள் எல்லாருக்கும் அனுப்புகின்ற பொதுமடலையாகிலும் எனக்கும் அனுப்பியதற்கு, என் நெஞ்சு நிறைந்த வாழ்த்துகள் ! நன்றியும் கூட !

16. ஆனால், நான் தாங்கள் விரும்பியவாறு மாநாட்டில் கலந்து கொள்ள இயலாதவனாக உள்ளேன். பொருள் நிலை எனக்கு அதற்குகந்த படி இல்லை. நாற்பதாண்டுகள்—பெய்த் தமிழ்த் தொண்டு செய்தும் இன்னும் நான் வாடகை வீட்டில் தான் குடியிருக்கின்றேன். இன்னும் அன்றாடம் அரிசி, புளி, உப்பு, காய்கறி, முதலிய உணவுப் பொருள்களை வாங்கித்தான் சமைக்கின்றோம். நான்கு நாள்களுக்குத் தேவையானவற்றைக் கூட வாங்கிப் போடும் அளவில் நான் வளர்ந்து விடவில்லை என்பதை மிகவும் அடக்கத்தோடு தெரிவித்துக் கொள்கின்றேன். ஏனெனில் என் குறிக்கோள், உயிர் வாழ்க்கையின் நோக்கம் என்னை வளர்த்துக் கொள்வதன்று. தமிழை வளர்ப்பதே ! தமிழினத்தை மீட்பதே ! தமிழ் நிலத்தை உரிமை பெறச் செய்வதே ! அவற்றினின்று நான் ஒரு நொடியும் விலகி வாழ்ந்ததில்லை ; வாழவும் விரும்பவில்லை. அப்படியொரு விடாப்பிடி எனக்கு ! என்ன செய்வது ?

என்னைப் படைத்த இறைவனுக் கென்றமிழ்
தன்னை வளர்க்கநான் வேண்டும் என்பதே !

17. தங்கள் அன்பான அழைப்புக்கு என் நெஞ்சு நிறைந்த நன்றி.

அன்பு நிறை
— பெருஞ்சித்திரனார்.

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் நிலம் இதழ் எண் 97-இல் ஒரு படம். கலைஞர் அவர்களின் சிலை உடைப்பு. அப்படம் அறிவிக்கும் உணர்ச்சி தமிழனுக்கு வர வேண்டுமே. தமிழ் நிலம் இதழைப் படிக்கவே மாட்டான். பின் எங்கிருந்து இன உணர்வு வரும் ?

தமிழின உணர்வு மிக்கோரே விரைவில் ஐயாவின் இன உணர்வைத்தமிழ் மக்களிடம் ஊட்ட ஏற்பாடுகளைச்செய்யுங்கள்.

(தொடர்ச்சி 30-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

இன்றுள்ள தமிழர்கள்!

நூல்: தமிழர்மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்;
ஆசிரியர் : பர். க. ப. அறவாணன்.
விலை : 304 பக்கம். உரு 25/-
கிடைக்குமிடம் : ஐந்திணைப் பதிப்பகம்,
282, பைகிராப்ட்சு சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-5.

சமசுக்கிருத வல்லாண்மை:

தமிழர்கள் கிரேக்க, இலத்தீன், எபிரேய, சீனமொழிகள் பேசும் வணிகர்களுடன் மிகத் தெகன்மையான தொடர்பு கொண்டிருந்தனர். எனவே ஏற்றுமதி ஆகும் பொருள்களின் பெயர்களும் போயின; எந்த மொழியின் ஆளுமையும் ஏற்பட வில்லை.

வடமேற்கு இந்தியாவில் நுழைந்து அங்கிருந்த திராவிட நாகரிகத்தை அழித்துப் பின்பு தென்னிந்தியாவிலும் ஊடுருவிய ஆரியர்களின் சமசுக்கிருத மொழி, தமிழ்நாட்டில் அறிமுகம் ஆனது தமிழ்மொழி வரலாற்றில், தமிழர் பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிடத் தக்க மொழிப் படையெடுப்பு ஆகும்.

அன்று வடமேற்கு இத்தியாவில் நுழைந்த ஆரியர்தம் வேத மொழிக்கு எழுத்து வடிவம் இல்லை. அவரிடம் எழுத்து வரிசையாகிய நெடுங்கணக்கு முறையும் இல்லை. எனவே எழுதும் முறையையும் எழுத்தின் வரிசை முறையையும் தமிழரிடமிருந்தே ஆரியர் கற்றனர். எனவேதான் (பிற்காலத்தில் அவர்கள் உருவாக்கிக் கொண்ட) சமசுக்கிருத எழுத்துகளின் உயிரெழுத்து வரிசை தமிழெழுத்து வரிசையைப் போன்றிருந்தது. சமசுக்கிருத் எழுத்து வடிவமும் தமிழில் பழைய எழுத்து முறையான தாமிழியை ஒத்துள்ளது.

வட்டார மொழிகள்:

அன்று வட இந்தியாவில் இருந்த முந்தை திராவிட மொழியுடன், திராவிட மொழிகளுடன் சமசுக்கிருதம் கலந்தது. ஆரியர் கிழக்காயும் வடக்காகவும் தம் ஆளுமையை விரிவு படுத்தினர். தெற்கே விந்தியம் வரை அவர்தம் ஆட்சி விரிவடைந்தது. இமயத்திற்கும் விந்தியத்திற்கும் இடைப்பட்ட உள்நாட்டு மொழிகள் (பிராகிருதங்கள்) சமசுக்கிருத உறவால் தனித்தனி வட்டார மொழிகளாகிக் காலப் போக்கில் தனித்தனி மொழிகளும் ஆயின.

ஆரியர் தென்னிந்தியா நுழைவு:

அகத்தியர், வசிட்டர் காலத்திற்குப் பிறகு ஆரியர் போர் வழியிலன்று, நேர்வழியிலும் அன்று, மதவழியில் தென்னிந்தியாவிற்குள் நுழைந்தனர். ஆரிய வழிபாட்டு முறைகள் மத நெறிகள் தமிழ் நாட்டில் பரவின. தமிழர்கள் முதலில் ஆரியக்

கடவுளரின் அடியார்கள் ஆக்கப் பட்டனர். ஆரிய மத அடியார்களாகத் தமிழர்கள் மாறிய நிலையில் சமசுக்கிருத மொழி தென்னிந்தியாவில் ஊற்றம் கொண்டது. கடவுளை ஒப்புக் கொண்ட நிலையில் சமசுக்கிருதம் கடவுள் மொழியாகத் தென்னிந்தியாவில் அறிமுகம் ஆயிற்று.

சமசுக்கிருதக் கலப்பு:

திராவிடர்கள் சமசுக்கிருதத்தைத் தெய்வமொழி (தேவ பாஷை) என்று சொல்ல வைக்கப் பெற்றனர். இந்த வாய்ப்பைப் பேருகப் பயன்படுத்திக் கொண்ட ஆரியர், சமசுக்கிருத மொழி வழி அவர்தம் கலை, பண்பாடு, நாகரிகம் ஆகிய வற்றையும் புகுத்தினர்.

இந்த அடிப்படையில்தான் தாய்வழிக் குமுக அமைப்பு ஒழிக்கப் பட்டுத் தந்தைவழிக் குமுக அமைப்பு தலைமை பெற்றது. ஆரியப் புரோகிதர் திராவிடர் தம் அந்தப்புறம் தொடங்கி ஆட்சிப் புலம் வரை பற்றிக் கொண்டனர்.

சமசுக்கிருத மொழியைத் திராவிட மொழிச் சொற்களோடு கலந்து பேசுவது சிறப்பு, பெருமை என்று கருதப்பட வைக்கப் பெற்றது. (இன்று தமிழுடன் ஆங்கிலம் கலந்து பேசுதல் பெருமை என்று அடிமைத் தமிழர் கருதுதல் போல) தம் தாய்மொழியுடன் மிகுதியான சமசுக்கிருதச் சொற்களைக் கலந்தால் அது மிகுந்த அழகு என்று எண்ணவைக்கப் பெற்றது. கலப்பின் அளவு குறையக் குறைய அழகின் மதிப்பும் குறையும் என்று நம்பப்பட்டது. இந்த மனப்பான்மை பெருகியதன் விளைவாக ஆங்காங்கே இருந்த வட்டார மொழிகளைச் சமசுக்கிருத மொழிக் கலப்பு காலப்போக்கில் தனித்தனி மொழிகள் ஆக்கியது.

இவ்வாறு வேற்று மொழிக் கலப்பால் புதியமொழிகள் தோன்றும் என்பதை, ஐரோப்பியர்களின் குடியேற்ற நாடுகளின் வரலாறு உறுதிப்படுத்துகிறது. சான்றாக, ஐரோப்பியருக்கும் சீனருக்கும் வணிகம் பெருகிய பொழுது, ஆங்கில சீன மொழிக் கலப்பாலும் சிதைவாலும் பிட்கின் (Pidgins) என்ற புது மொழி தோன்றியது. அதைப் போலவே மேலனேசிய (Melanesia) நாடுகளில் வழங்கிய பல மொழிகளுடன் இருந்த ஆங்கிலமொழி கலக்கக் கலக்கப் புதிய மொழிகள் தோன்றின.

ஆப்பிரிக்காவிலும் வேறுபல இடங்களிலும் ஐரோப்பியக் குடியேற்ற (காலனி) மொழிகளும், உள்நாட்டு மொழிகளும் சேர்ந்து கலந்ததன் விளைவாக கிரயோல் (Craole) என்னும் பெயரில் புதுமொழிகள் தோன்றின. கரிபியன் (Caribbean) தீவுகளில் அமெரிக்கக் கெடுபிடியிலிருந்து தப்பிச்சென்ற நீக்ரோக்கள் கிரயோல் என்னும் கலப்பு மொழியை மிகுதியாகப் பேசினார்கள்.

இதற்கு மிகமிகச் சரியான எடுத்துக்காட்டு மலையாளம் ஆகும். ஒரு காலத்து வட்டாரத் தமிழ்மொழி நம்பூதிரிப் பிராமணர் தம் சமசுக்கிருதக் கலப்பால் கேரளத்தில் மலையாளம் என்று பெயர் படைத்தது. இன்றும் மிகுதியான சமசுக்கிருதக் சொற்களைக் கலந்து எழுதும் நடை உயர்வானதாக மலையாளிகளால் கையாளப்படுகிறது.

மொழிச்சிதைவு இனச் சிதைவை உண்டாக்கும்:

அதற்கென்ன, எத்தனை மொழிகள் தோன்றினாலென்ன? பல்கினால் என்ன என்று தொலை நோக்காளன் எண்ணமாட்டான்; ஏனென்றால் மொழி வெறும் மொழியாக மட்டும் வரலாற்றில் நின்று விடுவதில்லை. மொழிவழிதான் தேசிய இனம் உருவாகும். மொழி சிதையும் பொழுது இனமும் சிதையும். இந்தியாவில் பல மொழிகள் இருப்பதால் அந்தந்த மொழிக்குத் தக தனித்தனித் தேசியம் உருவாக நேர்ந்தது. அவ்வாறு உருவாவதே முறை. ஐரோப்பிய நாடுகளையும் அங்குள்ள மொழிவழி இனங்களையும் ஒப்பிட்டுப் பார்க்க. எனவே ஒரு மொழி கிளைக்கும் பொழுது ஓர் இனம் சிதைகிறது; பிரிகிறது; பலவாகிறது; சமசுக்கிருதக் கலப்பால் முந்தைத் திராவிடத் தமிழ்த் தேசியம், நூற்றுக்கணக்கான மொழிவழித் தேசியங்களாகப் பிரிந்து சிதைந்தது என்பதுதான் உண்மை.

இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தின் உட்பிரிவுகளுள் ஒன்று, உரோமன்சு மொழிகளாகும். கி. மு. நான்காம் நூற்றாண்டில் எழுத்திலக்கியம் எதுவும் இன்றி இருந்த இலத்தீன், கிரேக்க மொழி உறவால் இலக்கிய மொழியாயிற்று. எளிய மக்களும், படைவீரர்களும் கல்லாத அடிமைகளும் இலக்கிய இலத்தீனிலிருந்து விலகி, பேச்சு இலத்தீனைக் கொச்சை மொழியாகப் பேசி வந்தனர். இக் கொச்சை மொழியை, இழிமொழி இலத்தீன் (Vulgar Latin) என்று பழித்தனர். ஆனால் இந்தக் கொச்சை இலத்தீன் மொழிதான், உரோமானியர் வேறு நாடுகளை வென்றெடுத்த போது, அங்கங்கிருந்த உள்நாட்டு மொழிகளுடன் ஆளுமை மொழியாகக் கலந்தது; பல புதிய மொழிகளைத் தோற்றுவித்தது. அப் புதிய மொழிகளே உரோமன்சு மொழிகள் என்று அழைக்கப் பெறுகின்றன.

இலத்தீன் மொழி உலகெங்கும் கோயில் மொழியாகவும் ஐரோப்பாவின் இடைக்கால, பிற்கால ஆட்சி மொழியாகவும் உரோமான்சு என்ற பல ஐரோப்பிய மொழிகளுக்குத் தாய் மொழியாகவும் உருவானதற்கு மூல காரணம் அம் மொழியன்று. அம் மொழியைப் பேசிய உரோமானிய மக்களின் வீறும் வீரமுமே காரணம். உரோமப் பேரரசு கி. மு. விலும், கி. பி. யிலும் இத்தாலி, பிரான்சு, இசுப்பெயின், போர்ச்சுகல், உரோமேனியா ஆகிய நாடுகளில் தன் வெற்றிக் குடையை விரித்தது. அந் நாடுகளில் வாழ்வோர் விளங்காத மொழி

Scanned with CamScanner

பேசுவோர் என்ற கருத்தில் காட்டு விலங்காண்டி (Barberian எனப்பட்டனர். விளங்காத மொழி பேசிய மக்களின் வள மற்ற மொழிகளுடன் உரோமப் பேராசின் கொச்சை இலத்தீன் கூடிக் கலந்தது. அந்தக் கலப்பால் உருவானதுதான் இசுப்பானிசு என்னும் மொழி முதலானவை.

இதைப் போலவே ஆரியர் தம் வல்லாண்மை வரவால் சமசுக்கிருத மொழி இந்தியாவில் வழங்கப்பட்ட உள்நாட்டு மொழிகளோடு கூடிக் கலந்து, புதிய மொழிகள் உருவாயின. அஃதாவது அந்தந்த வட்டாரத்தில் பேசுப்பெற்ற பழைய மொழிகள் அழிந்தன என்று பொருள். இதனை வடஇந்தியா வில் மிகுதியாகப் பேசப்படும் இந்திமொழியின் அமைப்பும் வலியுறுத்துகிறது. ... வட இந்தியாவில் இருந்த உள்நாட்டு மொழிகள் சமசுக்கிருதக் கலப்பால் பல புது மொழிகளாகக் கிளைத்தமை போன்றே, பிற்காலத்துச் சமசுக்கிருத மொழி தென்னிந்தியத் திராவிட மொழிகளுடன் கலந்து அம்மொழிகளைத் திராவிடச் சார்பு உடையனவாக்கின. அதிலிருந்து தப்பி நின்ற மொழி தமிழ் ஒன்றே ஆகும்.

கலை, பண்பாட்டு நாகரிகக் கலப்பு!

ஆரிய மொழிக்கலப்பு வெறும் மொழிக்கலப்பாக நில்லாமல் கலை, பண்பாட்டு, நாகரிகக் கலப்புடையதாக மாறும் வாய்ப்பு நேர்ததால், தமிழ்நாட்டுக் கலை, பண்பாடு, நாகரிகங்கள் அழியும். அவற்றுடன் கூடத் தமிழ்மொழியும் அழிந்து விடும் என்ற முறையான அச்சம் தமிழ் முன்னோர்க்கு இருந்தது. இந்த அச்சம் மிகமிக உண்மையானது என்பதை உலகமொழி வரலாற்றை அறிந்தவர்கள் உணர்வார்கள்.

முற்காலத்து உரோமானியர்தம் படையெடுப்பாலும், பரவுதலாலும் ஐரோப்பாவில் இருந்த பல மொழிகள் திரிந்தன; சில மொழிகள் அழிந்தன. அவ்வவ் விடங்களில் இலத்தீனும் அதன் கொச்சை வடிவமான உரொமான்சு மொழிகளும் குடியேறின. உரோம மொழியுடன் மட்டுமன்றி உரோமானியரின் கலை, பண்பாடு, நாகரிக வல்லாண்மையும் அங்கங்கே பரவின.

வரலாற்றுச் சான்றுகள்:

பிற்காலத்து ஆங்கிலேயர்தம் குடியிருப்பு ஆப்பிரிக்க, ஆசிய, வடஅமெரிக்க, ஆசுத்திரேலிய கண்டங்களில் பரவியது. ஆங்கில மொழி பரவுதல், வட அமெரிக்காவில் சிவப்பு இந்தியர்கள் பேசுகின்ற மொழிகளைச் சில விடங்களில் அழுத்தியே விட்டது. இன்னும் பல இடங்களில் உள்நாட்டுப் பழங்குடிகள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். பழங்குடி மக்களும் அவர் தம் மொழிகளுடன் ஆசுத்திரேலியப் பாலைநிலப் பகுதிகளுக்கும் காட்டுப்பகுதிகளும் விரட்டப்பட்டனர். ஆங்கிலம் மட்டு மன்று, வட அமெரிக்கத் தென்னமெரிக்கப் பகுதிகளில்

பரவிய இசுப்பானிசு மொழி உள்நாட்டுச் சிவப்பு இந்தியர் மொழியை ஒழித்தது. அண்மையில் பொதுவுடைமை நாடாக மலர்ந்துள்ள நிகரகுவா சிவப்பிந்தியர் இசுபானிசு குடியேற்றத்தால் நிலை குலைந்தனர். அவ் வாதிக்குடிகள் கிட்டத்தட்ட ஒழிக்கப் பட்டனர். அவர்களுடன் (வைத்து எண்ண) வெறும் நான்கு விழுக்காடாகச் சிறுத்தனர். இசுபானிசு காரர்களுக்கும் மெசுடிசா (Mestiza) என்ற உள்நாட்டுச் சிவப்பிந்தியக் குடிகளுககும் கலந்து பிறந்த கலப்பின மக்கள் 96 விழுக்காடாயினர். ஆக, மொழியும் போயிற்று; மக்களும் மாய்ந்தனர்.

கரிபியன் தீவுகள் இசுபானிசுக் குடியிருப்பாக மாறியது. கி. பி. 1600 - இல் இசுபானிசுக் காரர்களுடன் ஆங்கிலேயரும், பிரஞ்சுக்காரரும் குடியேறினர். உள்நாட்டு மக்கள் ஒடுக்கப் பட்டனர். அத்தீவுகளில் இருந்த காரிப் மொழியும், அரவாக்கன் (Aruwaken) மொழியும் அழிந்தன. சமைக்கா (Jaumaica) என்று சிவப்பிந்தியத் தீவு. அங்குள்ள மக்களின் மொத்தத் தொகை 1,613,880. இவர்களுள் 1,453,660 நீக்ரோக்கள். 18,000 பேர் ஐரோப்பியர். ஆப்பிரிகர் தம் மொழியை மறக்க ஆங்கில மொழி அரசோச்சுகிறது. போர்ட் ரிக்கோ (Port-Rico) என்றொரு நாடு. இங்கு அரவாக்கன் மொழியும் பேசப்பட்டது. இன்றோ இசுபானிசும் ஆங்கில மொழியும் ஆட்சி செலுத்துகின்றன. மக்களின் சொந்த மொழியான அரவாக்கன் மொழி அழிந்தது.

இப்படி ஆட்சிப் பீடத்தில் இருப்போர் மொழியாக அறிமுகமாகும் மொழிகள், உள்நாட்டு மொழிகளைச் சாகும் மொழிகளாக ஆக்கிவிடுவது உண்மை. எனவேதான் விழிப்புள்ள இன மக்கள், வேற்று மொழியின் வால்லாண்மையை வேர்விடும் நிலையிலேயே தாக்க வேண்டி உள்ளது. கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் போர்ச்சுகல்லும் பிரான்சும் சேர்ந்து இசுபெயினை எதிர்த்துப் போரிட்டனர். போரின் முடிவில் பிரஞ்சுப் போர் வீரர்களும் அரசியல் காரர்களும் போர்சுக்கல் நாட்டில் தங்கினர். இதன் விளைவாகப் பிரஞ்சுமொழி போர்ச்சுக்கல் மொழி மீது ஆளுமை செய்யத் தொடங்கியது. ஆனால் போர்ச்சுக்கீசிய அறிஞர்கள் இதனை விரும்பவில்லை; எதிர்த்தார்கள். ஆதனால் போர்ச்சுக்கீசிய மொழியில் தூய்மை ஓரளவு காப்பற்றப் பட்டது.

கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்துப் பள்ளிகளில் கிரேக்க மொழியும் இலத்தீன் மொழியும் பயிற்றுவிக்கப் பெற்றன. அம் மொழியைத் தவிர வேறு எந்த மொழியிலும் பேசக் கூடாது என்று நெறி இருந்தது. இந் நெறியை மீறும் மாணுக்கர் சாட்டையால் அடிக்கப்பட்டனர். ஆங்கில மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட பைபிளைப் படிப்பதற்குத் தடை இருந்தது. இலத்தீன் மொழியில்தான் பைபிளைப் படிக்க

வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. கோயில்கள் அனைத்திலும் இலத்தீன் மொழியே கோலோச்சியது. நாடாளுமன்றத்திலும் பொதுவிடங்களிலும் பிரஞ்சு மொழியில் பேசுவதே மதிப்பு என்று கருதப்பட்டது. பிரஞ்சுமொழி அந்தக் காலத்தில் எவ்வளவு சாய்காலில் இருந்தது என்பதற்குப் பின்வரும் நிகழ்ச்சி சரியான எடுத்துக் காட்டு ஆகும்.

சப்பானிய வரலாற்றை எடுத்துக் கொள்ளுங்கள். அந்த நாட்டைத் தொடர்ந்து கோலோச்சி வந்தது சீன மொழி - கலை, பண்பாடு, நாகரிகங்களில் — ஓயாது கொடுத்து வந்த சீன வல்லாண்மைக்குச் சப்பான் முடிவு கட்டியது. கி. பி. 1868 - 1894 ஆண்டுகளில் சீனாவோடு நடத்திய போர் விழுப்புண்கள் ஆறுவதற்கு முன்பே அனைத்துத் துறைகளிலும் சப்பானியத் தேசியம் உருவாக்கப் பெற்றது.

சாதி எனும் பிரித்தாளும் சூழ்ச்சி !

தமிழர் வரலாற்றில் சான்று நூலாகக் கருதத்தக்கக் கழக இலக்கியத் தொகுப்பை ஒரு கால நூற்களாகக் கொள்ளுதல் பிழை.

கி. மு. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தொடங்கி, கி. பி. 2-ஆம் நூற்றாண்டு வரை தோன்றிய பாடல்கள் கிடைக்கப் பெற்றனவும் தொகுப்பாசிரியரின் விருப்பு வெறுப்புக்குத் தக, தள்ளப் பட்டன போகக் கொள்ளப்பட்டனவும் அடங்கியது ஆகும் ! எனவே பல கால அடுக்குச் செய்திகள் அதனுள் அடங்கி இருப்பதாகக் கொள்ளுதல் வேண்டும்.

இந்த அடிப்படையிலேயே பிறப்பு வழிச் சாதிக் குறிப்புகள் கழக இலக்கியத்துள் இடம் பெற்றதை ஆராய்தல் வேண்டும்.

தொடக்கக் கால மக்கள் பிரிவுகள் :

மக்கள் குமுகாயத்தின் தொடக்கக் காலத்தில் வகுப்புப் பிரிவுகள் இல்லை. அவன் நாடோடியாக அலைந்த காலத்திலும் வகுப்புப் பிரிவுகள் தோன்றவில்லை. உணவுப் பொருள்களைத் திரட்டும் பருவத்திலிருந்து அவற்றை உருவாக்கம் செய்யும் பருவத்திற்கு மாந்த இனம் நகர்ந்தபோது நிலவுடைமை தோன்றியது. நாடோடியாகத் திரிந்த கூட்டம் ஓர் இடத்தில் தங்கி நிலத்தைப் பண்படுத்திப், பயன்படுத்திப் பொருள் உருவாக்கம் செய்யத் தொடங்கியது. இதில் கூடப் பெண்ளே தொடக்கக் காலத்தில் முதன்மை தாங்கினர். எல்லாக் குமுகங்களிலும் நில வேளாண்மை நிகழ்த்தியவர்கள் பெண்டிரே. நிலத்தைப் பெண்ணாக உருவகிப்பதும் ஈண்டு நினைக்கத் தக்கது.

மேடு பள்ளத்தில், காடு, ஆறுகளில் அலைந்து திரிந்து நடக்க இயலாத மென்மை உடல் வாய்ந்த பெண்கள் கூட்டம் கருவுறும் காலங்களிலும், மாதப் போக்குக் காலங்களிலும் அலைய முடியாமல் மிகுதியும் துன்பப் பட்டிருக்க வேண்டும். (—தொடரும்.)

பெருஞ்சித்திரனார் நேருரைகள்!

'குழந்தை இலக்கிய வளர்ச்சியில் தமிழ்ச்சிட்டின் பங்கு'

(மதுரை யாதவர் கல்லூரி மாணவி திருவாட்டி நா. கமலா க மு. அவர்களின் மெய். மு. (M.PhiII) பட்ட ஆய்வுரைக்காக 22-10-85 - இல் எடுக்கப்பெற்ற நேருரைக் குறிப்புகள்.)

1) தமிழ்ச்சிட்டு எந்தப் பின்னணியில் தொடங்கப் பெற்றது?

1954-இல் 'தென்மொழி' என்னும் தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழைத் தொடங்கிய பின், கல்லூரி மாணவர்களிடத்திலும், தமிழாசிரியர்களிடத்திலும், ஓரளவு கற்றறிந்தவர்களிடத்திலும் மொழி, இலக்கியம், பண்பாடு, குமுகநிலை — ஆகிய துறைகளில் அதன் கருத்துகள் நல்ல வரவேற்பைப் பெற்றன. எனினும் உயர்நிலைப்பள்ளி, தொடக்கப் பள்ளி போன்ற மாணவர்களிடத்தில் அது பெருமளவு பரவவில்லை. எனவே அவர்களுக்கென்று, தென்மொழியின் நடையில் சிறிது எளிமையும், இளம் மாணவர்களுக்குத் தேவையான கலை, அறிவியல், வாழ்வியல் கருத்துகளைத் தாங்கிக் சிறுவர்கள் அறிந்து கொள்ளும் வகையிலும் தூயதமிழில் ஓரிதழைத் தொடங்க வேண்டும் என்று கருதினேன். அக்கருத்து 1985-ஆம் ஆண்டு செயல் படத் தொடங்கி, 'தமிழச்சிட்டு' என்னும் இதழுருவில் வடிவம் பெற்றது. அன்று முதல் இன்று வரை ஏறத்தாழ இருபது ஆண்டுகளாகத் 'தமிழ்ச்சிட்டு' வெளிவந்து கொண்டிருக்கிறது.

2) அதன் நோக்கம் யாது?

கல்வி நிலையில் வளர்ந்து வரும் மாணவர்களுக்குத் தூய தமிழிலும், தாய்மொழியாகிய தமிழைப் பிழையின்றி எழுதவும் கற்கவும் பயிற்சியளிக்க வேண்டும் என்னும் நோக்கத்துடனும், அறிவியலிலும், பண்பாட்டிலும், கலையிலும், வாழ்வியலிலும் நல்ல வளர்ச்சி பெற்று எதிர்காலத்தில் நல்ல குடிமைப் பண்புடன் கூடிய குடிமக்களாக அவர்கள் வளர்த்தெடுக்கப் படவேண்டும் என்னும் கருத்துடனும் 'தமிழ்ச்சிட்டு' தொடங்கப் பெற்றது. அந்த நோக்கத்தில் அவ்விதழ் இன்று வரை தளர்ச்சியோ நெகிழ்ச்சியோ இன்றி வெற்றி நடைபோடுகிறது.

3) 'தமிழ்ச்சிட்டு' என்ற பெயரை ஏன் வைத்தீர்கள்?

'சிட்டுக்குருவி' குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் நன்கு தெரிந்த பறவை. அதன் சுறுசுறுப்பும் உழைப்பும் முயற்சியும் சிறுவர்களுக்குக் கட்டாயம் வேண்டுவன. தமிழ் மாணவர்களும் அச்சிட்டுக் குருவியைப் போல் சுறுசுறுப்பாகவும், உழைப்பும் முயற்சியும். உடையவர்களாகவும் இருக்க வேண்டும் என்று எண்ணி இடப் பெற்றதே அதன் பெயர். மேலும் தனியான ஒரு சிட்டுக் குருவியைப் பார்ப்பது கடினம். இரண்டு அல்லது மூன்றாகவே அக்குருவிகள் பறந்து திரிவதைப் பார்க்கலாம். எனவே அன்பு உணர்விலும் கூடி வாழ்வதிலும் அச்சிட்டுக் குருவிகள்

மாணவர்களுக்கும் சிறுவர்களுக்கும் எடுத்துக் காட்டுகளாக அமைகின்றன. எனவேதான் தமிழ்நாட்டுச் சிறுவர்களுக்கான இக் கலை, அறிவியல் இதழுக்குத் 'தமிழ்ச்சிட்டு' என்று பெயரிடப்பெற்றது.

4) தமிழ்ச்சிட்டில் விளம்பரங்கள் வருவதில்லையே, ஏன்?

'தமிழ்ச்சிட்டில்' மட்டுமன்று, நாங்கள் நடத்தும் 'தென்மொழி', 'தமிழ்நிலம்' இதழ்களிலும் விளம்பரங்கள் வெளியிடுவதில்லை. அதற்கான காரணங்கள் கீழ்வருமாறு —

1) விளம்பரங்களைத் தருவோர், தம் விளம்பரங்களைப் பெரும்பாலும் தூய தமிழில் தரவிரும்புவதில்லை. நாங்களே தமிழ்ப்படுத்தி வெளியிட விரும்பினாலும், அதை விளம்பரம் கொடுப்பவர்கள் ஏற்பதில்லை.

2) அத்துடன் நாங்களே விளம்பரங்களுக்காகத் தேடி அலைய விரும்புவதில்லை. இது போலும் சிறிய அளவு விற்பனையாகும், பொதுமக்களுக்காக அல்லாத இதழ்களுக்கு எவரும் விளம்பரம் தரவிரும்புவதில்லை.

3) விளம்பரம் பெரும்பாலும் பொழுது போக்குக்குரிய இதழ்களுக்குத்தான் பொருந்தும். இதுவும் நாங்கள் வெளியிடும் பிறவும் பொழுது போக்கு இதழ்கள் இல்லை. பாதுகாத்து வைத்துப் பேணிப் படிக்கவேண்டிய அறிவு நூல்களைப் போன்றவை இவை;

— எனவே விளம்பரங்களை நாங்கள் முகாமையாகக் கருதுவதில்லை. மற்றபடி நாங்கள் விருப்பும் கொள்கைப்படி, தூய தமிழ் விளம்பரங்கள் கிடைக்குமானால், அவற்றை ஓரளவு, இதழ் நலம் கருதி ஏற்று வெளியிடவும் விரும்புகிறோம்.

5) தமிழ்ச்சிட்டின் விற்பனை நிலைகுறித்து ஏதேனும் கூற இயலுமா?

— இதில் கூறக் கூடாத கமுக்கம் ஒன்றுமில்லை. ஒரே சீரான நிலையில் அதிகம் என்றில்லாத படியும், குறைவு என்றில்லாதவாறும் இது விற்பனையாகி வருகிறத. தமிழ்ச்சிட்டு விற்பனையைப் பொறுத்த அளவில் எங்களுக்கு மிகுதியான இழப்பில்லை.

ஒன்றை உங்களுக்கு உறுதியாகச் செல்கிறேன். வேறு எந்தச் சிறுவர் இதழும் இது போல் ஆர்வமுடன் வரவேற்கும் இதழாக இருக்க இயலாது. பல உயர்நிலைப் பள்ளிகளில் இது பத்து, இருபது, ஐம்பது, நூறு என்னும் அளவில் உறுப்பினர்களைக் கொண்டிருப்பதுடன், 'தமிழ்ச்சிட்டு'ச்கென்று ஒரு மாணவர் கூட்டமே உருவாகி வந்திருப்பதையும், வருவதையும் எவரும் மறுத்தல் இயலகது. தமிழ்நாட்டில் உள்ள வேறு எந்தச் சிறுவர் இதழ்க்கும் இப்படியான ஆதரவை எதிர்பார்க்க இயலாது.

Scanned with CamScanner

விற்பனை குறைவாக இருக்கலாம். ஆனால் அதை நன்கு விளம்பரம் செய்து பெருக்க முடியும். எனக்கு வேறு பல நோக்கங்களும், அறிவுப் பணிகளும் இருப்பதால், அதில் கவனம் செலுத்தவோ அகலப்படுத்தவோ இயலாதவனாக இருக்கிறேன்.

6) தமிழ்ச்சிட்டின் போக்கில் மாற்றம் ஏற்படுத்தியுள்ளீர்களா?

போக்கில் என்றால் எதில் என்று தெளிவாக விளங்கவில்லை. கொள்கை நிலையிலோ, அல்லது வெளியீட்டு நிலையிலோ ஒரே நிலைதான். மாற்றம் ஒன்றுமில்லை.

7) தமிழ்சிட்டின் இதழியல் உத்திகளை விளக்குவீர்களா?

1) கொள்கையளவில், மாணவர்களிடத்தில் தமிழ்ப்பற்றையும் நல்ல தமிழறிவையும், அறிவியல், கலையியல், பண்பாட்டியல், வாழ்வியல் உணர்வுகளை வளர்க்க வேண்டும் என்பதற்கு என்னென்ன வகையாகக் கட்டுரை, கதை, துணுக்குகள், பாடல்கள் இவற்றைக் கையாள வேண்டுமோ, அவற்றைக் கையாள்கிறோம் ; தருகிறோம்.

2) தமிழ்ச்சிட்டில் படங்கள் ஒவியங்கள் மட்டுமே குறைவு- இல்லை என்று கூடச் சொல்லாம். அதற்குப் போதிய பொருள் நிலை ஏந்துகள் இல்லை.

3) மேலும் விற்பனையைப் பெருக்க வேண்டும் என்னும் நோக்கத்தில் விளம்பரம் கூட இதுவரை செய்ததில்லை.

8) தமிழச்சிட்டின் சிறப்புக் கூறாக எதனைக் கருதுகிறீர்கள்?

அதன் தூய தமிழ் நடையையும், அதுதரும் இனிய அறிவு பொதிந்த பாடல்களையும், அறிவியல், வாழ்வியல் செய்தி- களையும்.

9) மரபுக் கவிதையைப் போற்றுகின்ற நீங்கள் புதுக்கவிதையைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

புதுக்கவிதை என்று சொல்வதையே நான் ஏற்பதில்லை. சேலை என்பது வேறு, 'சட்டை' என்பது வேறு. சேலையைச் சட்டை என்றோ சட்டையைச் சேலை என்றோ சொல்ல முடியுமா?

அதுபோல்தான் கவிதையும், அஃதாவது பாட்டும் யாப்பு அமைதி கொண்டதைத்தான் பாடல் என்றார்கள். அவ்வாறில்லாததை, அஃது எத்தனை எதுகை மோனையான சொற்களைக் கொண்டதானாலும், உரைநடை என்றுதான் கொண்டார்கள்.

அழகிய உரைநடை கூட பாட்டாகி விட முடியாது.

இறையனார் அகப்பொருள் உரை — எதுகை, மோனை கலந்த அழகிய இனிய இழுமென ஓசையுடைய நடை. ஆனால் அது பாட்டு அல்லது கவிதை ஆகி விட முடியுமா?

எனவே புதுப்பாடல், அல்லது புதுக்கவிதை என்பதெல்லாம் 'இலக்கியம்' என்று ஏற்கலாம் ; பாடல் என்பது தவறு. சேலை- யைச் சட்டை என்பது போன்றது, அது வேண்டுமானால்

Scanned with CamScanner

சட்டை என்பதைப் பொருத்திப் பார்க்கின்ற இடத்தில், வேட்டி என்று கூட வைத்துப் பாருங்கள். சேலையை வேட்டி என்று சொல்லலாமா? சேலை வேறு, வேட்டி வேறு ; அதற்கோர் இலக்கணம், இதற்கோர் இலக்கணம்.

மேலும் புதுக்கவிதை வழக்கில் வந்தபின் அதைத்தவிர்ப்பதும் இலக்கிய வளர்ச்சியைக்கெடுக்கும். எனவே அதை நான் வரவேற்க வில்லைஎன்று சொல்லவில்லை. அதன் பெயர் பொருத்தமாக இல்லை.

பா நடை உரை அல்லது பாட்டுரை என்று வேண்டுமானால் கூறலாமேயன்றி அதுவே பாட்டோ, அல்லது கவிதையோ ஆகி விடாது.

சிலப்பதிகாரத்தில் கூட இதுபோலும் நடை உண்டு. அதைப் பாட்டுமடை என்று இனம்பிரித்திருக்கிறார் அதன் ஆசிரியர். எனவே அதைப் புதுப்பா என்னுமல் வேறு புதுப்பெயரைக் கூட வைக்கலாம். குதிரையும் கழுதையும் சேர்ந்து பிறந்ததைக் கோவேறு கழுதை என்று வைத்ததைப்போல, கழுதையும் புலியும் சேர்ந்து பிறந்ததைக் கழுதைப் புலி என்று வைத்ததைப் போல, உரையும் பாட்டுமாய் நடையிடும், (அஃதாவது உரையின் வடிவமும், பாட்டு உணர்வும் அல்லது வடிவமும் சேர்ந்து இயங்குவதை) 'உரைப்பா' என்று சொல்லியிருக்கின்றேன். என்னுடைய 'கற்பனை ஊற்று' என்னும் நூல் முழுவதும் அந்நடையிலேயே எழுதப்பெற்றது. பாரதியாரும் இதையே 'வசனகவிதை' என்னும் பெயரால் அழைத்துள்ளார். வசனகவிதை வடமொழி; உரைப்பா என்பது தமிழ்.

10) தமிழ்ச் சிட்டிற்கும் பிறகுழந்தை இதழ்களுக்கும் (குறிப்பாகக் கோகிலம், கரும்பு போன்றவை) உள்ள வேறுபாடுகளைக் கூற முடியுமா ?

பொருளியல்தான் பெருத்த வேறுபாடு. நம்மிடம் அந்தப் பொருள் நிலை இருந்தால், அவற்றை விட 'தமிழ்ச் சிட்டை' மிக மிகச் சிறப்பாக வெளியிட்டுக் காட்ட முடியும்.

தமிழ்ச் சிட்டு— பயனுடைய கொள்கை இதழ்.

பிற இதழ்களோ வெறும் வாணிக நோக்கம் கொண்டவை. அவற்றைப் படித்தால், இப்பொழுதுள்ள மாணவர் உலகம் போலத்தான் இருக்கமுடியும். 'கோகில'த்தையோ 'கரும்'பையோ யாரும் சேர்த்து வைத்துத் தொகுப்பாக்கிப் பேழையுள் வைத்துப் பேணி வருவதைப் பார்க்க முடியாது. 'தமிழ்ச்சிட்டு' உலகம் முழுவதும் அவ்வாறு பேணப் பெறுகின்றது. இ'து ஒன்றே அவற்றிடையுள்ள பெருத்த வேறு பாட்டைத் தெளிவு படுத்தும்.

11. குழந்தைப் பாடல்களில் நீங்கள் பெரிதும் விரும்புவது ஒலி நயமா ? பொருள் நயமா ?

ஒலி நயமே பாடலாகி விட முடியாது ; அது போல் பொருள் நயமும பாடலாகி விட முடியாது. ஒலிநயமும் பொருள் நயமும்

சேர்ந்து யாப்பொழுங்கிற்குக் கட்டுப்பட்டு இயங்குவதுதான் பாடல். இம் மூன்று உறுப்புகளில் ஒன்று குறைந்திருப்பினும் அது குறையுடைய பாடல்தான். குறையுடைய பாடல் சிறப்பதில்லை; மனத்தில் பதிவதும் இல்லை.

ஆனாலும் 'பெரிதும் விரும்பப் படுவது' என்று நீங்கள் கேட்பதால், கருத்துதான் என் பாடல்களில் முதன்மை பெறுவது; அதை வெளிப்படுத்துவதற்கும் நிலைப் படுத்துவதற்கும் துணையாயிருப்பன, ஒலி நயமும் யாப்பும்.

12. உங்கள் இதழில் பொழுது போக்குக் கூறு என்று எதனைச் சுட்டலாம்?

எவரும் வீணுகப் பொழுது போக்கக் கூடாது என்பதுதான் என் அழுத்தமான எண்ணம். எனினும் அறிவழுத்தத்திற்குத் தரப்படும் ஓய்வையே நான் பொழுது போக்கு என்று கருதுகின்றேன்.

அவ்வாறு பார்க்கையில் தமிழ்ச்சிட்டில் வரும் புதிர்கள், விடுகதைகள், தெரியுமா உங்களுக்கு, பொன் மொழிகள், சிறு சிறு அறிவுக் கதைகள் — ஆகியவற்றைப் பொழுதுபோக்குப் பகுதிகள் என்று கூறலாம்.

13) தமிழ்ச் சிட்டு முகப்பு அமைப்பில் மாற்றங்கள் இருப்பது ஏன்?

மாற்றங்கள் என்று குறிப்பிடப் பெறுவது அதன் வேறுபட்ட அட்டைப் படங்களையே என்று கருதுகின்றேன்; ஒவ்வோரிதழ்க்கும் வேறுபாடு தெரிந்து கொள்வதற்கும், சிறுவர்கள் கவர்ச்சி பெறுவதற்கும், அட்டைப் படங்களில் மாறுதல் செய்யப் பெறுதல் வேண்டும். இருப்பினும் எங்களால் அதிகக் கவர்ச்சியாகவும், வேறு வேறு படங்களையும், இதழ்தொறும், தரமுடியவில்லை. அதற்குப் பொருளியல் தட்டுப்பாடே காரணம். இனி, இன்னென்றையும் இங்குக் குறிப்பிட்டாகல் வேண்டும். ஒவ்வோரிதழிலும் அட்டையில் சிறுவர்களுக்கேற்ற அழகிய கருத்துப்பாடல் வெளிவருவது தமிழக இதழியல் வரலாற்றிலேயே, 'தமிழ்ச்சிட்டி'லும் 'தென்மொழி'யிலும் தான் என்பதை நீங்கள் நினைவில் வைத்தாக வேண்டும். இதைப் பின்பற்றித்தான் வேறு சில இதழ்களும் பின்னுளில் வெளிவந்தன, வந்து கொண்டுள்ளன.

14) குழந்தைப் பாடல்களைப் பொறுத்த வரையில் நீங்கள் உங்கள் முன்னேடியாக யாரையாவது கருதுகிறீர்களா?

அவ்வாறு குறிப்பிட்டு எவரையும் சொல்வதற்கில்லை. ஆனல், பாவேந்தர் பாரதிதாசன் குழந்தைகளுக்காக எழுதியுள்ள பாடல்கள் ஒருவாறு என்நோக்கத்திற்கு வழிகாட்டுதலாக இருந்திருக்கின்றன. அதுவன்றிப் பழைய நாடோடிப் பாடல்கள் சிலவும் எனக்குச் சில புதுப் பாணிகளையும் கருத்துகளையும் வழங்கியிருக்கின்றன;

15) தமிழ்ச்சிட்டின் வாசகர்களைப் பற்றிக் கூற இயலுமா?

'தமிழ்ச்சிட்டை' ஒருமுறை படித்தவர்கள் பெரும்பாலும் அதன் தொடர்ந்த வாசகர்களாகி விடுவார்கள். தமிழ்ச்சிட்டுப் படிக்கும் மாணவர்கள் அங்கங்கே ஒன்று சேர்ந்து ஓரியக்கமாக இயங்குவதைக் கண்டிருக்கின்றேன். பெரும்பாலும் நான் நிகழ்ச்சிகளுக்காகச் செல்லும் இடங்களிலெல்லாம் தமிழ்ச்சிட்டு படிக்கும் மாணவர்களும் குழந்தைகளும் அதில் வெளிவந்த பாடல்களை என்னிடம் பாடிக்காட்டுவது வழக்கம். சில குழந்தைகள் ஆடியும் நடித்தும் காட்டுவது எனக்குப் பெருமகிழ்ச்சியை உண்டாக்கியிருக்கிறது.

நான் 1974-இல் சிங்கப்பூர் மலேசியா சென்றிருந்த பொழுது, அங்கு சில தமிழ்ப்பள்ளிக் குழந்தைகள், தமிழ்ச்சிட்டில் வெளி வந்த 'சிற்றெறும்பே' 'உறுப்புகள் சண்டை' குடையும செருப்பும் போலும் பாடல்களை நாடகமாகவே நடித்துக் காட்டியதைப் பார்த்து மகிழ்ந்து வியக்கவும் நேரிட்டது.

தொடக்கக் காலத்தில் சிங்கை, மலேசியப் பள்ளிப் பாட நூல்களில் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரையிலும், நம் தமிழ்ச்சிட்டுக் குழந்தைப் பாடல்கள் இடம் பெற்றிருந்த செய்தி பலருக்கும் தெரியாது.

இதுபோல் வேறு இதழ்களுக்கு வாசகர் தொடர்பு உள்ளது என்று சொல்ல இயலாது.

16) தமிழ்ச்சிட்டின் திறனாளிகளைப் பற்றிக் கொஞ்சம் கூறுங்கள்

தமிழ்ச்சிட்டின் திறனாளிகள் என்று யாரைக் குறிப்பிடுகின்றீர்கள் என்று தெரியவில்லை. திறனாய்வாளர்களையா? அல்லது தமிழ்ச்சிட்டில் எழுதுகின்ற எழுத்தாளர்களையா? அல்லது தமிழ்ச்சிட்டால் உருவான மாணவர்களையா? — தெரியவில்லை. இருப்பினும் ஒருவாறு அடக்கிச் சொல்கின்றேன்.

தமிழ்ச் சிட்டில் எழுதுகின்றவர்கள், பெரும்பாலும் இயல்பான தமிழில் எழுதினாலும், அவற்றைத் திருத்தி வெளியிடுவதன் வழி அவர்களும் நல்ல, தரமான எழுத்தாளர்களாக மாறி, வளர்ந்து வருகின்றார்கள்.

தமிழ்ச்சிட்டைத் தொடக்கக் காலத்தில் படித்த மாணவர்கள் இக்கால் ஆயிரக் கணக்கானவர்கள் இளைஞர்களாகவும், பல துறைகளிலும் உழைக்கும் பணியாளர்களாகவும், கல்லூரி ஆசிரியர்களாகவும் மாறி ஓரளவு தமிழறிவு நிரம்பப் பெற்றவர்களாக உள்ளார்கள்.

அவர்கள் அவ்வப்பொழுது நம்மிடம் தொடர்பு கொண்டு, தம் தம் நன்றியுணர்வுகளைப் புலப்படுத்தியும், தம் குழந்தைகளுக்குத் தமிழ்ச்சிட்டுப் பாடல்களைப் பயிற்றுவித்தும் வருகிறார்கள்.

விளம்பர ஆரவாரங்கள் நிறைந்த இக்காலத்தில், அமைதியாக மேற்கொள்ளப் பெறும் ஒரு தூய தமிழ்த் தொண்டுக்கு, இதுவே

Scanned with CamScanner

ஒரு வெற்றி நடைமுறையாகும், விளைவுமாகும் என்பதை எவ-ரும் ஒப்புக் கொள்ளவே செய்வர்.

17) சிறுவர் கலை இதழ் என்பதை விளக்க முடியுமா?

சிறுவர்க்குரிய அறிவியல், வாழ்வியல், பண்பாட்டுக் கல்வியைக் கற்பிக்கும் இதழ் என்பதே பொருள். கலை என்பது கல்வி என்றும் பொருள்தரும் சொல்தானே!

18) தமிழ்ச்சிட்டின் அட்டைப் பாடல்களின் பொதுத்தன்மை யாது?

1) படித்தவுடன் எளிதாக மனத்தில் தங்குமாறு எளிய இனிய சொற்களைக் கொண்டிருத்தல்.

2) எளிதாகப் படிக்கும் படி எளிய சிறு சிறு தொடர்களால் அமைந்திருத்தல்.

3) அவர்களுக்கு அண்மையிலுள்ள விளங்கும் படியான செய்திகளால் அரிய கருத்துகளைக் கூறுதல்.

4) சிறிய வடிவமுடைய பாடல்களாக அமைதல் — முதலியனவாம்.

(தொடரும்.)

தென்மொழி அன்பர்களுக்கு ஒரு நற்செய்தி!

சென்னையில் பெரு விழா!

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

அவர்களின் மிகச் சிறந்த வாழ்வியல் நூல்!

செயலும் செயல்திறனும்

நூல் வெளியீட்டு விழா.

தென்மொழி அன்பர்கள் பலரும்,
மொழி, இன, நாட்டு நல அறிஞர்களும்
கலந்து கொள்கின்றனர்.

சென்னை, தேவநேயப் பாவாணர் நூல் அரங்கில்
19-3-88 அன்று மாலை 4 மணியளவில்.

ஏறத்தாழ 400 பக்கங்கள்! விலை 35 உரு.
விழாவில் உரு 30க்குக் கிடைக்கும்!

அன்பர்கள் அனைவரும் தவறாமல் வருகை தருக!

செந்தமிழ்நூல் வெளியீட்டுக் குழு.
சென்னை-5.

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

முந்துங்கள். உண்மை சட்டாயம் வெல்லும். வணக்கம்.
அன்புள்ள, — அதியமான். தாழையூத்து.

3. பள்ளிகளில் சாதிக்குறிப்பு தேவையே!

பாவலரேறு அய்யா!

''பெருஞ்சித்திரனார் நேருரைகள்'' என்ற பகுதியைத் 'தென்மொழி' இதழில் காண நேர்ந்தது. அரிய கருத்துகள் பலவற்றையும், தாங்கள் இதழ் நடத்திச் செல்ல அடையும் இன்னல்களையும் கண்டு மனம் வருந்தினேன். இருப்பினும் இதழைத் தொடர்ந்து நடத்தும் தங்களை நன்றியுடன் பாராட்டக் கடமைப் பட்டவன்.

தங்கள் நேருரையில் பள்ளிகளில் சாதி கேட்கக் கூடாது என்றும் கூறியுள்ளீர்கள். இது மிகவும் சரியான கருத்துதான். ஆனால் இது நீண்ட நெடிய பயணம் (தனித்தமிழ் நிலர்) வெற்றியுடன் முடிவடைந்து ''தமிழ் நாட்டின் உரிமைகள் அனைத்தும் தமிழனுக்கே'' எனும் நிலை வந்த பிறகுதான்.

அய்யா, இன்று பள்ளிகளில் சாதி கேட்கக் கரணியம் பின் தங்கிய (தள்ளப்பட்ட) குமுகத்தினருக்கு உதவி செய்து உயர்வை அவர்களுக்கு அளிக்கத் தான்.

இந்த நாட்டின் வரலாற்றினைத் திருப்பி ஆழ்ந்து பார்க்கும் போது, பூணூல் திருமேனிகள் வரலாற்றுக் காலந்தொட்டே நம்மினத்தை, சூத்திரனாக, பஞ்சமனாக, உடலுழைப்பாளியாகத் தள்ளி அதற்குத் தங்கள் புரட்டுகளான வேதம், இதிகாசம் போன்றவற்றைக் காட்டி நம்மை இழிவு படுத்தி வந்துள்ளமை நமக்குப் புலனாகும். 'சூத்திரன் வேதம் கேட்டால் காதில் ஈயத்தைக்காய்ச்சி ஊற்று', 'படித்தால் நாக்கை அறு' என மனு(அ)தர்மக்கூற்றைக் கரணியம் காட்டிக் கல்வி மறுக்கப் பட்ட நமது குமுகத்தினர், இன்று சென்ற நூற்றாண்டின் விடி வெள்ளியாகத் தோன்றிய தந்தை பெரியாரின் அரும் பாடு மற்றும் நம்மினத் தலைவர்களின் பெரும் பாடு ஆகியவற்றுக்குப் பின் கிடைத்த 'வகுப்புரிமை ஆணை' மூலமாகப் படிப்படியாகக் கல்வி கற்று வருகின்றனர். மெல்ல மெல்ல கல்வித் துறையில் அடியெடுத்து வைக்கும் நம்மினத்தவர். தலைமுறை தலைமுறையாக மனப்பாடம் செய்வதில் வல்லமை பெற்ற அவாளின் திறமைக்கு ஏற்றபடி அமைந்த இன்றைய கல்வித் திட்ட முறையில் முன்னேற முடிவதில்லை.

இன்றும் கம்(கிரா)மத்தில் தாழ்த்தப் பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவன் தேர்வில் குறைந்த விழுக்காடு (35) பெற எவ்வளவு உழைக்கிறானோ அவ்வளவுதான் டான்பாசுகோ பள்ளியில் படிக்கும் ஒரு பார்ப்பன மாணவன் உழைக்கிறான். இந் நிலையில் அதிக மதிப்பெண் பெற்றவன் திறவோனாகி விடுவது சற்றும் முறையன்று.

வகுப்புரிமை காரணமாக இவ்விருவரும் ஒரே தொழிற்பயிற்சியில் சேரும் போது சம அளவு திறமைதான் காட்டுகின்றனர்.

(தொடர்ச்சி 32-ஆம் பக்கம்.)

(4-ஆம் அட்டை பக்கத் தொடர்ச்சி)

கிறேன். தங்களின் அயராத உழைப்புக்கு என்னல் இயன்ற அளவு துணை நின்று தொண்டு செய்வேன் என்று உறுதி கூறுகிறேன்.

தங்கள் அன்புத் தொண்டன்
— சீத்தலைச் சாத்தனர், பாண்டூர்.

O : 1275 : அன்பும் தமிழும் போல் என்றும் வாழ்ந்து அடிமைத் தமிழினத்தை மீட்க தங்கள் தங்கள் வழியில் என்றும் தொடர்வதையே தமிழர் தம் பொங்கல் வாழ்த்தாகத் தங்களுக்கும் அளிப்பதில் பெருமையும் மகிழ்வும் அடைகிறோம்.

தங்கள் உண்மையுள்ள, —க. கதிர் குன்றன். அமரர் பூண்டி.

O : 1276 : பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்கட்கு, வணக்கம், நலமே தங்களைச் சார்வதாக!

அனைத்திந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நடத்திய ஆய்வரங்கத்தில் (சென்ற ஆண்டிற்கு முதலாண்டில்) பேராசியர் ஒருவர் தங்களின் 'கொய்யாக் கனி'யைத் திறனாய்வுக்கு எடுத்துக் கொண்டு பற்பல குறைகளைக் கூறுவதாக ஆய்வுக் கட்டுரையை அமைத்திருந்தார்! அது கண்டு வருந்திய என்னுள்ளம், அடுத்தடுத்து வரும் ஆய்வுத் தொகுதிகளில் ஆய்வரங்கில் தங்களின் நூல் சிறப்புகளைக் கூறும் ஆய்வுக் கட்டுரைகளைப் படைக்க வேண்டும் என்று உறுதி கொண்டது.

அதன் முதற்படியாகச் சென்ற ஆண்டு மே திங்களில் திருப்பதியில் நடைபெற்ற ஆய்வுக் கருத்தரங்கின்-ஆய்வுக் கோவையில் 'கனிச்சாறு—ஒரு பல்கலைக் களஞ்சியம்' என்னும் ஆறு பக்கக் கட்டுரையை இடம் பெறச் செய்து மனநிறைவு பெற்றேன்!

அதன் பயனக, இனித் தொடர்ந்து ஒவ்வோர் ஆய்வுக் கருத்தரங்கிலும் தங்களின் நூல்பற்றியே ஆய்வது என என்னுள்ளம் விரும்பி முடிவெடுத்தது. எனவே இவ்வாண்டு நடைபெறவிருக்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கில் 'கனிச்சாறு ஊட்டும் மொழியுணர்வு' என்னும் ஆய்வுக் கட்டுரையினையும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பாக நிகழ இருக்கும் கருத்தரங்கில் 'கனிச்சாறு காட்டும் இயற்கை' என்னும் ஆய்வுக் கட்டுரையினையும் படைக்க உள்ளேன் என்பதனைத் தங்களுக்குப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்! இப்பணி சிறக்க வேண்டுவன தங்களின் அன்பும் வாழ்த்துமே!

ஆய்வரங்கில் படிக்கப்பெற்ற பின்பு அக்கட்டுரைகள் தென்மொழிக்கு விடுக்கப்பெறும்! ('கனிச்சாறு ஒரு பல்கலைக் களஞ்சியம்' என்னும் கட்டுரை தென்மொழியில் வெளியிடப் பெற்றது என்பதனையும் இவ்விடத்தில் நினைவு கூர்கின்றேன்.) தாங்கள் இங்கு வருகை தந்த போது, 'பாவியக்கொத்து' பற்றிக் கூறியவை என் நெஞ்சத்தில் வேரூன்றி விட்டன. அதன் பயன் பின்பு காணலாம்.

தங்களின் ஒப்புயிர்வற்ற உயிர்த் தொண்டாம் தமிழ்த் தொண்டுக்குப் பொருள்நிலையில் உதவ இயலாதவனாக இருப்பது பற்றி அவ்வப்போது எண்ணி வருந்துவதுண்டு! தங்களின் கருத்து வித்துகளை ஆங்காங்கே தூவும் இச் சிறிய தொண்டேனும் செய்வதே தங்களுக்கு நான் செய்யும் நன்றிக் கடனாய் எண்ணி ஆறுதல் அடைகின்றேன்! அன்புடன்,

—ப. எழில் வாணன், பள்ளபட்டி.

ஒ : 1277 : பண்போடியைந்த அன்பிற் பெரியீர்! இன்றே அனுப்பினன் இருபது உருபாய்! தொடர்ந்து தென்மொழி தொய் விலாதனுப்புக; அடர்ந்து படித்தே ஆறுதல் அடைவேன். தென்மொழி என்னைப் பொறுத்த வரையில் இன்தமிழ்த் துணி-வுடன் இயம்புதல் கேட்டு, முதுமைகொண்டநான் உணர்விலும் உழைப்பிலும் முதுமை பெற்றும் பயனெது மிலையென வெறுப்-புற் றிருக்கும் எனக்கு உறுப்படி தென்மொழி உயிர்போம் வரையே! —ஆ. தங்கவேல். பேட்டைவாய்த்தலை.

(30-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் தாழ்த்தப்பட்ட சாதிக்காரனை உயர்த்தியது எது! சாதி தானே. எந்தச் சாதியின் காரணமாக நம்மினம் பின்னுக்குத் தள்ளப்பட்டுக் கல்வி மறுக்கப்பட்டதோ அதே சாதியின் காரண மாக இழந்த நம் உரிமைகளைச் சிறிது சிறிதாகத் திரும்பப் பெற் றுக் கொண்டுள்ளோம். இதனைப் பூணூல் திருமேனிகளும் அவர் கட்கு ஆல வட்டம் சுற்றும் அவர்தம் அடிவருடிகளும்தாம் எதிர்த்துத் 'தகுதி திறமை' எனக் கூப்பாடு போடுகின்றனர். அந்த வரிசையில் அய்யாவும் சேரலாமா?

இந்த நாட்டில் சாதியின் கரணியமாகத் தீண்டாமை ஏற்பட் டது. மெல்ல மெல்லக் கல்வியறிவு பரவுவதன் காரணமாகத் தீண்டாமை மெதுவாக மறைகிறது. இன்று பள்ளிகளில் சாதி கேட்கக் கரணியம் அவர்களைத் தாழ்ந்த (அக்காலம் போல்) அல்ல. மாறாக உயர்த்தத்தான். எனவே கண்டிப்பாகப் பள்ளிக ளில் சாதி கேட்டே ஆக வேண்டும். பதிவு செய்தே ஆக வேண்டும். இதில் மாறுபட்ட கருத்துக்கு இடமே இல்லை. இருக்கவும் கூடாது. அது தமிழினத்துக்கு உகந்ததுமன்று.

'முள்ளை முள்ளால் எடுப்பது போன்று' சாதியால் தாழ்ந்த நம்மவன் இன்று சாதியால் உயர்ந்து கொண்டு இருக்கிறான். இது தங்களுக்குப் புரியாதது அன்று.

மற்று வேறு கருத்துகள் இல்லை. ஈழத்துச் செய்திகளை இத ழில் தந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும் என்பது அடியேன் கருத்து. அன்புடன், அடுத்த இதழை எதிர்பார்க்கும்.

— பாப்பாத்தி. செருக்களை.

19.3.88 'செயலும் செயல்திறனும்' நூல் வெளியீட்டு விழாவிற்குச் சென்னைக்கு வாருங்கள்!

மீண்டும் ஒரு வல்லிருள் தமிழகத்தைக் கவ்வுமோ என அறிவாளர்கள் அஞ்சுகிற நிலை. (இந்நிலையில்) எதற்கும் அஞ்சாமல் எவர்க்கும் அடிபணியாமல் உரத்த குரலில் தங்கள் உணர்வுகளை உரைப்பதைத் தமிழ் நெஞ்சங்களிடையே எதிரொலித்து வாருங்கள். அறிவுக் குருடர்களின் விழிகள் ஒருநாள் திறக்கவே செய்யும்! அப்போதாவது அவர்கள் விளங்கிக் கொள்ளட்டும்! தொடர்க உங்கள் தொண்டு. நன்றி.

—கடலூர் மணிமாறன், கிருட்டிணராய புரம்.

○ : 1268 : அன்புத் திருவுளமே! வணக்கம். வாழி!

'தென்மொழிச் சுவடி; 23 ஓலை; 12 இதழின் முகப்புப்பாடல், ஆசிரியவுரை, நேருரைகள் என்னுள்ளத்தை ஈர்த்தன. தமிழகத்தின் மாசிலா உளங்களின் வாய்மை உணர்வுகளின் வார்ப்படமாகத் தங்களின் ஆசிரியவுரை விளங்கியதால் நெஞ்சம் கனிந்தது. சங்கக்காலச் செந்தமிழ்ப் புலவர்ச் செம்மல்களின் நெச்சுரம், தாங்கள் பெற்றுள்ளமை கண்டு பெருமகிழ்ச்சி கொண்டேன். யான் எய்திய இன்பத்திற்குரிய தங்களின் திருவுள்ளப் பேற்றினைப் பாராட்டாவிடில் 'செய்தக்க செய்யாமையின்' பால் படுமென உணர்ந்து இந்த அன்புமடலை அனுப்பி மகிழ்கிறேன். செந்தமிழ் நெஞ்சங்களின் சார்பில் நன்றி! ஒல்லும் வகையால் உவந்து எல்லாவகைச் சிறப்புப் பணிகளுக்கும் முழு ஒத்துழைப்பு நல்குவேன். —புலவர். கோ. உள்ஒளி. திருப்பத்தூர். வ.ஆ.

○ : 1269 : பேரன்பின் பாவலரேறு அவர்களுக்கு, வணக்கம். தமிழ்ச்சிட்டு குரல் : 19, இசை : 4 இதழில் கண்ணீர் வாழ்வில் கரையும் குழந்தைகள்' என்னும் தலைப்புள்ள பாடலில், இந்திய நாட்டில் ஏழையர் எனவே துயரந்தான்' என்னும் வரியில் 'இந்தியாவை ஒரு நாடு' எனக் குறித்துள்ளீர்கள். தனித்தமிழ் நாட்டை அடைய எண்ணும் அனைவரும் இந்தியாவை ஒரு நாடென ஏற்பதில்லை எனபது தெரிந்த கருத்து. அவ்வாறிருக்க இந்தியாவை ஒரு நாடென குறித்தது புதுமையாக உள்ளது. (மாறுகத் துணைக் கண்டமெனக் குறித்திருக்கலாமே.) தாங்களே இவ்வாறு முரண் படுவது சரியன்று. எனவே இது தொடர்பாய் தங்களின் விளக்கம் தேவை. பணிவுடன்,

— அ. இளவேனிலன், பல்லடம்.

ஆசிரியர் குறிப்பு : நம் கொள்கை நிறைவேற்றப் பெறும் வரை இருக்கின்ற நிலைகள் தவறாக இருப்பினும், நாம் அவற்றைச் சட்ட நிலைப்படி எழுதிப் பேசி இயங்கத்தானே வேண்டியிருக்கிறது. நாம் விரும்பாமலேயே அவர்கள் அமைத்த கல்வியைத் தானே பயில்கின்றோம்; அவர்களின் அரசுப் பணிகளில் தானே அமர்கின்றோம்; அவர்கள் காசைத்தானே புழங்குகின்றோம்; அவர்கள் அமைத்த சட்டப்படி தானே இயங்குகின்றோம். அதில் இருந்து கொண்டுதான் அதன் பெயர் மாற்றத்தையும் வரலாற்றையும் நாம் மாற்றவேண்டியுள்ளது.

○ : 1270 :

தென்மொழியின் மின்னலிலே
எத்தனை ஆற்றல்-பொய்யை
வென்றிடும் ஆற்றல்!

நின் பொன்முகத்தின் பார்வையிலே
நின்றிடும் கூச்சல்-வெற்றுப்
பொய்ம்மைமேல் பாய்ச்சல்!

வன்மை மிகு தனித்தமிழை
வடித்துக் காட்டினாய்-கலப்பை
அடித்து ஓட்டினாய்!

Scanned with CamScanner

புன்மை போக்கும் பேரறிவே
வாழ்க வாழ்கவே - தமிழ்
வாழ வாழ்கவே !

அன்பு, —டேவிட், மதுரை.

○ : 1271 : தமிழ் நலஞ்சார்ந்த பெரியவர், பேரன்பிற்கும் பெரு மதிப்பிற்குமுரிய, உயர்திரு 'பாவலரேறு ஐயா அவர்களுக்கு அன்பு வணக்கம். தென்னாப்பிரிக்கா வாழ் சின்னப்பனின் நன்றி மடல்.

ஐயா, இறைவன் அருளாலும், ஐயாவின் நல்வாழ்த்துகளின் விளைவாலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் என்னைச் சேர்த்துக் கொண்டார்கள் என்ற செய்தியை ஐயாவுக்கு தெரியவைக்க நான் கடமைப்பட்டுள்ளேன். எமக்குச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இடம் கிடைக்கவில்லையென்று ஐயா அவர்கள் வருத்தப்பட்டதை நினைக்குங்கால், என் உள்ளம் உருகுகிறது. அதே நேரத்தில் தந்நலங்கருதாத தமிழ் நலம் கருதும் சான்றோருள் தலைசிறந்த தமிழினத் தலைவராகிய ஐயாவின் தொடர்பு எனக்கு மனவுறுதி தருகிறது.

அமுதத் தமிழுக்காகக் கடல்கடந்த எம்மைச் சென்னைப் பல்கலைக்கழகம் கைவிட்டதே என்று முடிவெடுக்கும் நேரத்தில் எம்மை அணைத்து ஆதரிக்கும் வகையில், ஆறுதல் கூறி, அறிமுகம் தொடர்புபடுத்தித், தமிழுக்குத் தொண்டு செய்யும் தலையாய பணி ஒன்றெனக் கருதி, எம்மைக் கரையேற்றிய ஐயா அவர்களுக்கும், அன்புத் தம்பி, தமிழ்த் தொண்டர் திரு. பூங்குன்றனார் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிக் கடனை என் உடலில் உயிர் இருக்கும் வரை மறவேன். ஐயா நான் உடல் நலத்துடன் இருக்கிறேன். பேராசிரியர் பண்டாரகர் திரு. அழகப்பனார் என்னை அடிக்கடி சந்தித்துக் கவனித்துக் கொள்கிறார். ஐயா அவர்களுக்கு என் நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொண்டு வணக்கத்துடன் விடைபெறுகிறேன். இவண்

—கி. சின்னப்பன். க. மு. அண்ணாமலைநகர்.

○ : 1272 : தமிழின விடுதலைக்கு இரவும் பகலும் போராடி வரும் எங்கள் தலைவர் அய்யா பாவலரேறு அவர்களே ! தமிழர் திருநாளில் வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறோம்.

—கரிகாலன், வீர மங்கலம், வ. ஆ.

○ : 1273 : தன்னலமின்றித் தமிழ் மொழி, தமிழ் இன விடியலுக்காகப் பல்வேறு இன்னல்களுக்கும் இடையில் அயராது பணியாற்றி வரும் 'மொழி ஞாயிறு' பாவாணரின் தலைமாணாக்கராம், தனித் தமிழ்க் காவலராம், பாவலரேறு ஐயா அவர்களுக்கு எங்களுடைய தமிழர் திருநாள் வாழ்த்துகள் ! தாங்கள் மேற்கொண்ட குறிக்கோளில் வெற்றி அடைய, உடல் நலமும், பொருள் வளனும் பெற்று வெல்க என வாழ்த்துகிறோம் !

— சோ. இளவழகன், திருச்சி. 2.

○ : 1274 : அன்பு நிறை பாவலரேறு ஐயா அவர்களுக்குத் தலைதாழ்ந்த வணக்கம். இத்தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் திருநாளில் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தார்க்கும் என்னின் அன்பான இனிய வாழ்த்துகள்.

தாங்கள் எல்லா வகையாலும் வளமும் நலமும் பெற்றுத் தமிழும் தமிழரும் உயர்வு பெறத் தொடர்ந்து பாடுபட வேண்டிக் கொள்

(தொடர்ச்சி 31-ஆம் பக்கம்.)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)